# மலர்ந்த ஜீவியம்

ஸ்ரீ அரவிந்தர் ஸ்ரீ அன்னை யோக மலர்

Vol. IV Issue 11 February 2015

இம்மாத மலரில். . .

பொருளடக்கம்

பக்கம்

இம்மாதச் செய்தி . . . . . . . . . . . . 2

லைப் டிவைன் . . . . . . . . . . . . . 3

சாவித்ரி . . . . . . . . . . . . . . . . . . 14

யோக வாழ்க்கை விளக்கம். . . . . . 16

பூரணயோகம் - முதல் வாயில்கள். 19

அஜெண்டா . . . . . . . . . . . . . . . 21

சமூகம் நம்மைக் காக்கும் தாய் . . . 23

அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம். . . . . 30

அன்பர் அனுபவம் . . . . . . . . . . . 38

பவித்ராவான இராமகிருஷ்ணர் . . . 44

அற்புதம் சமர்ப்பணம் செயலில் மலர்வது . . . . . . . . . . . . . . . . 52

**அன்னை இலக்கியம்**
பார்வைகள் . . . . . . . . . . . . . . . . 54

***ஜீவியத்தின் ஓசை***

*அன்பைச் செலுத்தினால் அருள் அதிகமாக நம்மை நாடும்.*

கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல.

வருடச் சந்தா ரூ.60/-
தனிப் பிரதி ரூ.5/-

இம்மாதச் செய்தி

**சாதிக்கும் ஆசை**
**ஆழத்தில் கரைந்தால்**
**பெரும் சாதனை எழும்.**



**ஸ்ரீ அரவிந்தம்**

**லைப் டிவைன்**

கர்மயோகி

## 27. The Sevenfold Chord of Being

(English Summary)

We have examined seven great terms of existence. The ancient seers had fixed on them. These terms are the foundation and mode of all cosmic existence. We have discovered the gradations of evolution and involution. We have arrived at the basis of knowledge we were striving for. We have declared that the origin, and ultimate reality of all in the cosmos is a triune principle. This principle is of transcendent and infinite Existence, Consciousness and Bliss. This is the nature of divine being. Consciousness has two aspects. One is illuminating state and power of self-awareness. The other is state and power of self-force. By these two, the Being possesses itself. It does so in both its static condition and in dynamic movement. In its creative action, it knows all that is latent within it. It has an omniscient self-energy. Through this it governs the universe of its potentialities. This creative action of the All-existent has its nodus in the fourth principle of Supermind. It is an intermediate principle or Real-Idea. In this Supermind a divine Knowledge is one with self-existence and self-awareness. It is one with a substantial Will. It is in perfect unison with that knowledge. It is the divine Knowledge which develops infallibly the movement, form and law of things. This law of things is in right accordance with their Truth. They are in harmony with the significances of its manifestation.

The creation depends on and moves between the biune principles of unity and multiplicity. It is a manifoldness of idea, force and form. These are the expressions of an original unity. The creation is an eternal oneness. This oneness is the foundation and reality of multiple worlds. It makes their play possible. The Supermind proceeds by a double faculty of comprehensive and apprehensive knowledge. It proceeds from the essential oneness to multiplicity. It comprehends all things in itself and as itself, the One. It apprehends all things in itself as objects. They are objects of its will and knowledge. In its original self-awareness, all things are one being. They are one consciousness, one will and one self-delight. The whole movement of things is a movement of one. Supermind proceeds in its action from unity to multiplicity and multiplicity to unity. It creates an ordered relation between them. This creates an appearance of division. But it is not a binding reality of division. It is a subtle unseparating division. It is a demarcation, a determination within the indivisible. Supermind is the divine gnosis. It creates, governs and upholds the world. Its secret Wisdom upholds our knowledge and our ignorance.

Mind, Life and Matter are a triple aspect of these higher principles. They work in subjection to Ignorance in the universe. The One is at play in division and multiplicity. In this play the One is apparently self-forgetful. Mind, Life and Matter are in subjection to this self-forgetfulness. Really these three are only subordinate powers of the divine quaternary. Mind is a subordinate power of Supermind. It takes its stand in division. It forgets the oneness behind. But it can return to oneness by re-illumination of the supramental. Life



is a subordinate power of the energy aspect of Sachchidananda. It is Force working out form. It is working out the play of conscious energy. This is from the standpoint of the division caused by Mind. Matter is a form of the substance of being. Sachchidananda assumes this form. It does so when it subjects itself to its own phenomenal action.

There is a fourth principle. It manifests at the nodus of mind, life and body. That nodus we call the soul.

But it has a double appearance. In front is the desire-soul. It strives for the possession and delight of things. Hidden behind this is the true psychic entity. This entity is the real repository of spiritual experiences. This fourth human principle is a projection. It is a projection and action of infinite Bliss. But this action is in terms of our consciousness. It is under certain conditions. They are the conditions of soul evolution in this world. By nature the Divine is an infinite consciousness. Its existence is the self-power of that consciousness. The nature of its infinite consciousness is pure and infinite Bliss. Self-awareness and self-possession are the essence of its self-delight. The cosmos also is a play of this self-delight. The delight of that play is possessed by the Universal. But it is held back in the individual. This is due to the action of ignorance and division. It is held back in the subliminal and superconscient being. On the surface it is lacking. It has to be sought for, found and possessed. This can be done by developing the individual consciousness. This development is towards universality and transcendence.

We may pose eight principles instead of seven. We see that our life is a refraction of the divine existence. This refraction is in inverted order of ascent and descent.

| | | |
|---|---|---|
| Existence | — | Matter |
| Consciousness-Force | — | Life |
| Bliss | — | Psyche |
| Supermind | — | Mind |

The Divine descends from pure existence through the play of Consciousness-Force and Bliss. It descends too through the creative medium of Supermind into cosmic being. We ascend from Matter through a developing life, soul and mind. Beyond we ascend to Supermind, an illuminating medium, towards the divine being. The higher and lower hemisphere meet at a knot. This is where mind and Supermind meet. There is a veil between them. For the divine life in humanity, the tearing of the veil is the condition; by tearing the veil, there is a descent. The higher descends into the nature of the lower being, and the lower being ascends forcefully into the nature of the higher. Through this the mind can recover its divine light in the all-comprehending Supermind. The soul can realise its divine self in the all-blissful Ananda. Life can repossess its divine power. This power is in the play of omnipotent Conscious-Force. Matter can open to its divine freedom and become a form of the divine Existence. The human being is the present crown and head of the evolution. The goal of evolution is not an aimless circling. It is not an individual escape from the circling. This creature, the human being, has an infinite potentiality. This creature has an infinite potentiality. He alone stands here between Spirit and Matter. He alone has the power to mediate between them. It is not just an ultimate awakening from the delusion of life. It is not awakening by despair and disgust of the



cosmic effort. It is not a rejection of life. His life has meaning. Its meaning is a luminous, powerful transfiguration. It is an emergence of the Divine in the creature. This must be the high-uplifted goal. This is that supreme significance.

This transfiguration may be changed from an essential possibility into a dynamic potentiality. There are psychological and practical conditions for it. Before turning to these conditions, we have to consider much. We must consider the essential principles of Sachchidananda's descent. We must consider the large plane of its order here. We must consider the nature and action of the power of Conscious-Force. This Force reigns over the conditions in which we live. The seven or eight principles we have already examined are essential to all cosmic creation. They are there manifested or unmanifested in us. We are far from being the adults of evolutionary nature. We are still this 'Infant of a year'. The higher Trinity is the source of all existence. It is the basis of all play of existence. All cosmos is an expression and action of its reality. No universe can be merely a form of being. It cannot have sprung up in an absolute nullity and void. It cannot remain standing out against a non-existent emptiness. It must be a figure of existence within the infinite Existence behind all figure. Or it must be itself the All-Existence. We see it is really both of these things at once. We can see this when we unify our self with cosmic being. It is the All-Existent figuring Himself out. He figures Himself in an infinite series of rhythms. He does so in His own conceptive extension of Himself. This extension is in Time and Space. Any cosmic action is impossible without the play of an infinite Force of Existence. This play produces and regulates all these forms and movements. That Force is

the action of an infinite Consciousness. In its nature it is a cosmic Will. It determines all relations. It apprehends them by its own awareness. It could not do so without a comprehensive Consciousness behind. This Consciousness is behind that mode of cosmic awareness. It originates as well as holds and fixes the relations of Being. The relations of Being are a developing formation. Or they are a becoming of itself which we call a universe.

Consciousness is thus omniscient and omnipotent. It is in entire luminous possession of itself. In its very nature this possession is necessarily Bliss. It cannot be anything else. A vast universal self-delight must be the cause of cosmic existence. This Bliss is the essence and object of cosmic existence. The ancient seer spoke of "this all-encompassing ether of Delight of existence". He declared that this delight is our ether. "If it were not, then none could breathe, none could live." This self-bliss may become subconscient. It may be seemingly lost on the surface. It must be there at our roots. All existence must be a seeking to discover and possess it. The creature in the cosmos may find himself in various ways. He may find himself in will and power, or light and knowledge. He may be in being and wideness, or in love and joy. In whatever way he finds himself, he must awaken. He awakens to something of the secret ecstasy. He may awaken to joy of being or delight of realisation of knowledge. Or he awakens to rapture of possession by will and power. Or he awakens to ecstasy of union in love and joy. These are the highest terms of expanding life. They are the essence of its hidden roots. Its heights are yet unseen. Wherever, then, cosmic existence manifests itself, these three must be behind it. They are within it.



The Trinity does not need to throw itself out into apparent being. Or, if it does so, it would not be cosmic being. It would simply be an infinity of figures. They would have no fixed order or relation. But this is not the case. They develop and bring out from themselves a fourth term of Supermind, the divine Gnosis. In every cosmos there must be a power of Knowledge and Will. This power fixes out of infinite potentiality the determined relations. It develops the result out of the seed. It rolls out the mighty rhythms of cosmic Law. This power governs the worlds as their immortal and infinite Seer and Ruler. It is nothing else than Sachchidananda Himself. It creates nothing which is not in its own self-existence. All cosmic Law is not imposed from outside. It is from within. All development is self-development. All seed and result are seed of a Truth of things. All are the result of that seed. They are determined out of its potentialities. For the same reason, no Law is absolute. Only the infinite is absolute. Everything contains within itself endless potentialities. They are quite beyond its determined form and course. They are determined through a self-limitation by Idea. The Idea proceeds from an infinite liberty within. This power of self-limitation is an inherent power in the boundless All-Existent. The Infinite can assume a manifold finiteness. Otherwise it would not be the Infinite. The Absolute has a boundless capacity of self-determination. It is in knowledge and power and will and manifestation. Otherwise it would not be the Absolute. This Supermind then is the Truth or Real-Idea. It is inherent in all cosmic force and existence. It is necessary to determine and uphold relation and order. It upholds the great lines of the manifestation. The Vedic Rishis described Sachchidananda in their language. Existence, Consciousness and Bliss are the

three highest hidden Names of the Nameless. So also, this Supermind is the fourth Name. It is fourth to THAT in its descent. It is fourth to us in our ascension.

Mind, Life and Matter, the lower trilogy, are also indispensable to all cosmic being. They are not necessarily so with the form which we know on earth. Or with the conditions we know on earth. But they are indispensable in some kind of action however luminous or subtle. Mind is a faculty of Supermind which measures and limits. It fixes a particular centre and views from that. It views the cosmic movement and its interactions. In a particular world or plane, mind need not be limited. Mind is a subordinate faculty. But, one who uses it can see things from other standpoints. Or he can see things from the real Centre of all. Or, he can see in the vastness of a universal self-diffusion. Still he must fix himself normally in his own firm standpoint. This is for certain purposes of divine activity. Suppose there was only universal self-diffusion or if there were only infinite centres without some limiting action for each, then there would be no cosmos. There would be only a Being musing within Himself infinitely. He would muse as a creator or poet may muse freely. He would muse before proceeding to the work of creation. This state may exist somewhere in infinite existence. But it is not what we understand by a cosmos. It would have a kind of unfixed and unbinding order. Such an order Supermind might evolve.

Supermind has a work of fixed development. Its work would proceed to measurement and interaction of relations. For that measurement, Mind is necessary. Mind is a subordinate action of Supermind. It needs to be aware only as a



subordinate. It need not develop relations on the basis of egoism. This we see active in terrestrial Nature.

Once Mind exists, Life and Form follow. Life is simply the determination of force and action. It is the determination of relation and interaction of energy. The interaction is from many fixed centres of consciousness. These centres are not fixed in place or time. But they are fixed in persistent coexistence of beings or soul-forms of the Eternal. These soul forms support a cosmic harmony. That life may be very different from life as we know or conceive. Essentially it would be the same principle at work. That principle we see here figured as vitality. The ancient Indian thinkers called it Vayu or Prana. It is the life-stuff. It is the substantial will and energy in the cosmos. This will and energy is working out into determined form and action. It is working out into conscious dynamis of being. Substance too might be very different from our view of material body. It might be much more subtle. It might be much less rigidly binding. Its law of self-division would be less binding. Its resistance would be less binding. The body or form might be an instrument and not a prison. Yet some determination and form and substance would always be necessary. This would be necessary for the cosmic interaction. Even if it were only a mental body, or it might be something more luminous and subtle, it might be more puissantly and freely responsive than the freest mental body.

Wherever Cosmos is, one principle only may seen to be apparent. It may seem to be the sole principle of things. Everything else may appear as no more than its forms and

results. They may seem not indispensable to cosmic existence. They are a front presented by being. But such a front can only be an illusory mask. Or it may be an appearance of its real truth. Where one principle is manifest in Cosmos, there all the rest must be present. They are not merely present and passive. They are secretly at work. In a given world it may be in possession of all seven principles. This may be at a higher or lower degree of activity. In another world they may be all involved in one principle. In that world it would become the initial principle of evolution. But there must be evolution of the involved. A world may start apparently from the involution of all in one power. Any world must have a destiny.  The evolution of the sevenfold power of being must be that destiny. Its destiny must be the realisation of its septuple Name. Therefore the material universe had to evolve apparent life from hidden life. It had to evolve apparent mind from its hidden mind. It must evolve apparent Supermind from hidden Supermind. It must evolve the triune glory of Sachchidananda from the concealed Spirit. There is a question. The question is whether this emergence will take place on earth. Will it take place in the human creation? Will it take place in this or any other material scene? Will it take place in this cycle? Will it take place in any other cycle of the large wheelings of Time? The instrument of this emergence of the Spirit is Time. The ancient seers believed in this possibility for man. They held it to be his divine destiny. The modern thinker does not even conceive of it. If he did conceive of it, he would deny or doubt. He may see a vision of the Superman. But it would be a figure of increased mentality or vitality. He would admit no other emergence. He would see nothing beyond these principles. Up till now these have been our limit and



circle. In this progressive world this human creature has a divine spark. With him, real wisdom is probably the higher aspiration. Wisdom  is not with the denial of aspiration. It is not with the hope that limits itself. It is not with the hope that circumscribes itself. That would be within narrow walls of apparent possibility. They are only our intermediate house of training. There is a spiritual order of things. In that, the higher we project our view, the greater the Truth. That Truth seeks to descend upon us. It is already there within us. It calls for its release from its cover. It is covered within manifested Nature.

## ஜீவிய மணி

மேல் உலகத்தின் பேரின்பத்தை நம் வாழ்வில் வெளிப்படுத்த சச்சிதானந்தம் முயல்வதையே சிருஷ்டியின் ஆனந்தம் குறிக்கிறது. இந்த ஆனந்தத்தை, சத்திய ஜீவியத்தின் வருகைக்குப் பிறகு அன்பர்கள் அனுபவிக்கிறார்கள். அகந்தையை விடுத்து ஆன்மாவை நாடும்போது சிறியதைக் கடந்து பெரியதை நாடுவதை நாம் இலட்சியமாகக் கொண்டால் அன்னை நம் இலட்சியத்தைப் பூர்த்தி செய்கிறார். மேலே போகப்போக, முயற்சி குறைவு, சாதனை அதிகம். பாடு ஆனந்தமாகிறது. இந்நிலை நீடிக்க வேண்டும் எனில் காலம், மனம், மேல்மனம், அகந்தை, சிறியது ஆகிய ஐந்து கட்டங்களையும் தாண்ட வேண்டும். உடலாலும், உணர்வாலும், மனத்தாலும், ஆன்மாவாலும், சைத்திய புருஷனாலும் சிற்றின்பம் பேரின்பமாகும்போது சாதனை இன்பமயமாகிறது. இன்பம் சாதனையாகிறது.

## சாவித்ரி

### Page 169: There is an Influence from a Light above
### மேலிருந்து எழும் அரவணைக்கும் கரம்

✡ தூரத்து எண்ணம், மூடி முத்திரையிட்டு மறைந்த பிரம்மம்

✡ சூரிய சந்திரர் பணியும் புதிரான சக்தி

✡ தெரியாத செவிட்டு சக்தி இப்பாதையில்

✡ போராடும் ஜீவியமும், அழியும் மூச்சும்

✡ இயற்கையைக் கடந்த சக்தி, காலத்தை நகர்த்தக் காத்திருக்கிறது

✡ இவ்வுலகம் நாம் காண்பதல்ல, நினைப்பதுமல்ல

✡ வாழ்வின் புதிர் கனவையும் கடந்தது

✡ இறைவனையடையும் ஓட்டத்தில் மனம் நம்மை ஆரம்பித்து வைக்கிறது

✡ நம் ஆன்மா பிரம்மத்தின் பூவுலகப் பிரதிநிதி

✡ பிரபஞ்ச வயல்களில் குறுகிய பாதைகள் மூலம்

✡ அதிர்ஷ்ட தேவதையின் அற்பப் பிச்சையைக் கேட்டுப்பெற்று

✡ பிரம்மம் பிச்சைக்காரனாகப் பவனி வருகிறது

✡ சிறுவாழ்வின் நாடக மேடையில்

✡ செயல்களின் பின்னணியில் வீசும் இனிய சுகந்தம்

✡ சிறு தெய்வத்தின் பெருவேகம்

✡ இறைவனின் இடையறாத ஊற்றின் புதிரான வேகம்

✡ ஆத்மாவின் அந்தரங்க இடைவெளியில் ஓடும் சக்தி

✡ உதவும் சக்தி, வேதனையுறும் பூமிக்கு ஆதரவு தரும்

✡ மறைந்த மகிழ்வு, கண்ணில் படாத நெருக்கம்



✡ முனகும் துடிப்பு, சிரிப்பின் எதிரொலி

✡ சூட்சும சந்தோஷம் முணுமுணுத்தெழுகிறது

✡ ஆழ்ந்த நித்திரையில் அனுபவிக்கும் எழுச்சி

✡ வலியின் லோகத்தில் ஆனந்த இதயம் புதைந்துள்ளது

✡ இயற்கையின் மார்பகத்தில் இன்புறும் குழவி

✡ மந்திரக் காட்டின் மாயத்துள் துள்ளும் குழந்தை

✡ ஆத்ம நீரோட்டத்தில் குழலாக ஒலித்தெழும்

✡ அழைப்பை ஏற்கக் காத்திருக்கும் காலம்

✡ உடலெனும் உயிரில் உரிமை பெற்ற உருவம்

✡ இறைவனின் ஆத்ம பொறி இறக்க மறுக்கிறது

✡ ஆதாயமான திரையை அவிழ்த்தெறிந்து

✡ அக்னியை எழுப்பி அவதாரத்தைக் கண்டு

✡ செல்லில் உறையும் மறைந்த மகத்துவம்

✡ காணாததைக் கண்டு பிரம்மத்தை எட்டும் திட்டமிட்டு

✡ மிகச்சிறிய பகுதிகள் மிகப்பெரிய தேவைகளை எழுப்பி

✡ அங்கும் பொன்னான சொல்லை ஏந்தி வரும் பொற்கால மனிதன்.

### ஜீவிய மணி

பல சமயங்களில் நாம் நல்ல முடிவுக்கு வருகிறோம். ஆனால் நடைமுறையில் செய்வதில்லை. படிக்க வேண்டும் என நினைக்கிறோம். படிப்பதில்லை. கடுமையாக உழைக்கத் தீவிர முடிவெடுக்கிறோம். முடிவு, முடிவாகவே இருக்கிறது. செயலாக மாறுவதில்லை.

**செயலாக மாறாத முடிவு வாழ்வில் பலன் தராது.**

## யோக வாழ்க்கை விளக்கம்

22/16. எதிரானது திருவுருமாற்றத்திற்குக் குறையாகும்.

- எதிரானது விலக்கப்பட வேண்டியது, அழிக்கப்பட வேண்டியது.
- குப்பை சுத்தத்திற்கு எதிரானது, அதை அகற்ற வேண்டும்.
- இருள், ஒளிக்கு எதிரானது. அழிக்கப்பட வேண்டியதா, விலக்கப்பட வேண்டியதா? அழிக்க முடியுமா, விலக்க முடியுமா?
- **இருள் ஒளியை நிழலாகத் தொடரும்பொழுது எப்படி விலக்க முடியும்?**
- முழுவதும் ஒளியானால் பொருள் தெரியாது, கண் கூசும்.
- இருளுக்கு ஒளி எதிரானது எனக் கொண்டு முழுவதும் இருளானால், பொருள் புலப்படாது.
- இவை ஜட உணர்வுகள்.
- நல்லது, கெட்டது, மன உணர்வுகள்.
- கோபம் எதிரானது. அதை முழுவதும் விலக்கினால் பரமஹம்சரின் பாம்பு நிலை வரும்.
- கோபத்தை அழிக்கும்பொழுது தெம்பாகவும் அழிக்கலாம், தெம்பில்லாமலும் அழிக்கலாம்.
- தெம்பில்லாதவன் கோபப்படாவிட்டால் அழிக்கப்படுவான்.
- **அழிவு அந்நிலையில் அர்த்தமுள்ளது எனத் தத்துவம் கூறுகிறது.**
- அறிவில்லாத அதிகாரி அர்த்தமில்லாமல் பேசும்பொழுது கோபம் வருகிறது.
- கோபம் பயன்படாது, ஊறு செய்யும்.
- கோபத்தை அடக்கினால், அதிகாரியின் செயல் பொறுக்க முடியாததாகும்.
- அதிகாரியின் கோபம் தவறு, அது என் பிரச்சனையில்லை.
  **ஏன் அதிகாரி என்மீது கோபப்படுகிறார்?**
  அது என் கேள்வி.



என்மீது கடுகளவு ஒரு குறையிருக்கிறது என்பது உண்மை-தான்.

அதற்காக இந்த மலை போன்ற புயல் எப்படிச் சரியாகும் என நினைப்பதைவிட அக்கடுகான குறையை விலக்க முயன்றால்,

**அதிகாரிக்கு ஆவேசத்தைக் கட்டுப்படுத்தத் தேவையான அறிவும், பொறுமையும், இச்சிறு குறையை விலக்க எனக்குத் தேவை, சில சமயம் போதாது எனப் புரியும்.**

- 28-ஆம் பக்கத்தைப் ஃபைலில் காட்ட, 38-ஆம் பக்கம் வருவது தவறு. மிகச் சிறிய குறை. அது ஒரு முறையும் இனி வரக்கூடாது என நினைத்தால் எரிச்சல் வரும்.
- செய்ய முடிவு செய்தால், கை தன்னை அறியாமல், 38-ஆம் பக்கத்தை எடுக்கும்.

அது ஆழ்மனம் (subconscious) மேல்மன முடிவை எதிர்ப்பதாகும்.

**''உள்ளன்புடன், முழு மனதுடன் செய்தேன்''**

என்பது இக்குறையற்ற நிலை.

மேல்மனம் அறிவால் ஏற்றதை உணர்வு ஏற்காத பொழுது ஆழ்மனம் அடம் பிடிக்கும். இதையறியாமல் அதிகாரியின் மீதுள்ள கோபம் நம் மீதே திரும்பும்.

**அதுவும் கோபமே.**

- கோபம் என்பது குறை. அறிவிலும் உணர்விலும், மேலும் கீழும் குறையிருக்கக் கூடாது என்பதை மனம் ஏற்றால்,

**அலையலையாக சாந்தி எழும்.**

- இது திருவுருமாற்றப் பாதை.
- இது ஆரம்பம். அடுத்த உயர்ந்த கட்டங்கள் உண்டு.
- கோபம் வருவதால் அதிகாரி அல்பமானவர் எனில் கோபம் வரக் காரணமாக நானிருப்பது அல்பமாகாதா என்பது நல்ல கேள்வி.

- ஏன் எனக்கு இந்த நிலை என சிந்தனை செய்தால், இது நெடுநாளைய குடும்பப் பழக்கம் எனத் தெரியும்.
- என் பழக்கத்தை அழிப்பது சிரமம். குடும்பப் பழக்கத்தை அழிப்பது எப்படி?

**எந்தப் பழக்கம் வெட்கப்பட வைக்கிறதோ அது அழியும்.**

- வெட்கப்பட வேண்டியதற்கு வெட்கப்படாதது, வெட்கப்பட வேண்டிய மனநிலை என்பது விளங்கும். விளங்குவதை நெஞ்சு ஏற்று புரட்சி செய்யாவிட்டால் கோபம் அடங்கும்.
- அந்நிலை மனத்திலும், நெஞ்சிலும் நிலையாக வந்தபின் அது போன்ற பழக்கமுடையவர்களைக் கண்டால், **அவர் யார், என்ன பேசுகிறார், ஏன் பேசுகிறார், நாமும் இது போலிருப்பது சரியில்லை** என்று தெரியும்.
- இத்தனையும் அக்குவேர், ஆணிவேரோடு களையப்பட்டால் மனம் ஏற்றதை பலருக்கும் கூறியபின் நம் மனம் உள்ளே மாறாமலிருப்பது தெரியும்.
- பிறர் கோபப்படும்பொழுது, நம்மீது அநியாயமாகக் கோபப்படும்பொழுது, நமக்கு எரிச்சல் வருவதற்குப் பதிலாக சந்தோஷம் வந்தால்,

**ஜீவன் திருவுருமாறுகிறது எனப் பொருள்.**

- அந்நிலை நமக்கு உள்ளே உதவும். பிறர் கோபம் தணியும்.
- அதன்பின் வாழ்நாள் முழுவதும் ஒரு முறையும் எவரும் நம்மிடம் கோபப்படவில்லை எனக் காணலாம்.
- இம்மனநிலை உளநிலையாகி, உளநிலை உடலுணர்வாகி, ஜீவநிலையானால் திருவுருமாற்றம் அனுபவமாக விளங்கும்.

**ஜீவிய மணி**

முடிவான பலனை முன்கூட்டித் தரும் அன்னை அடுத்த பிறவிப் பயனை இப்பிறவியிலேயே பூர்த்தி செய்கிறார்.



## பூரணயோகம் - முதல் வாயில்கள்

கர்மயோகி

### 109. ஏமாற்றுபவனும் மோட்சத்தில் ஏராளமாகப் பலன் பெறுவான்.

- சந்தன மரம் அதை வெட்டும் கோடரிக்கும் சந்தன மணம் தரும் எனத் தாகூர் கூறுகிறார்.
- ஆன்மீக உயர்வுக்கு அடையாளம் இரண்டு.

  1) தொடர்பால் துலங்க வேண்டும்.

  2) **எதிர்ப்பால் அழிய வேண்டும்.**
- **Snob** என்பவனை கயவன் என்றால் சரி, ஆனால் மிகப் பொருத்தமாகாது.
- மட்டமான உள்ளம் உள்ளவன் அதிகப்படியாக அடங்கி-யிருப்பான்.

  அவனைச் சமமாக நடத்தினால் அவரை மட்டமாக நடத்துவான். அம்மனம் உள்ளவனைத் தெளிவாக விளக்கும் சொல் **snob**, தமிழில் தவறான, மட்டமான குணமுள்ளவன் என்றுதான் கூறலாம்.
- 1960-இல் நிரந்தரமாக சர்க்கார் வேலையில் ரூபாய் 150 சம்பாதிப்பவன், தன் பால்ய நண்பன் டாக்டர் மகனுடன் நெருங்கிய நண்பன். தன் நண்பனுக்காக உயிரையும் விட வேண்டும் என 'உள்ளபடி' நினைப்பவன். உள்ளபடி எனில் இவன் அறிவுக்கெட்டிய அளவில் உள்ள உண்மைக்குரிய உணர்ச்சி அது, **infatuation** எனப்படும். அர்த்தமற்ற ஆர்வம் எனலாம். நட்புக்குரிய உயர்ந்த மனப்பான்மையின்றி, டாக்டர் மகன் என்பதால் அவனைப் பணக்காரன் எனக் கருதி (**பணக்காரன் என்பது உண்மையில்லை**) அவனுக்காக உயிரை விடும் மனப்பான்மையுடையவன். வேலையை இராஜினாமா செய்து நண்பன் ஆரம்பித்த தொழிலில் (ரூபாய் 2,000 முதலீட்டுடன் ஆரம்பித்த தொழிலில்) 100 ரூபாய்

சம்பளத்திற்கு வேலை செய்து ஓராண்டில் தொழிலில் ஏமாற்றும் வழிகளால் 17,000 ரூபாய் இலாபம் சம்பாதித்தான். டாக்டர் மகன் சுயநலமி, துரோகி.

இலாபம் அதிகமாக வந்ததால் உயிரை விடுபவனுக்கு துரோகம் செய்து வேலையினின்று விலக்கி விட்டான். நடுத்தெருவில் நிற்கிறான். நண்பன் நடுத்தெருவிலிருப்பது தனக்கு ஆபத்தென அன்பரை ஓர் தொழிலாரம்பித்து உதவ விரும்பி, அன்பர் அதை ஏற்றவுடன் அவரைப் பொய்யாகத் தூற்றி துரோகம் செய்ததாகக் கூறினான்.

- நடுத்தெருவில் நின்றவன் அன்பரின் 12,000 ரூபாய் முதலால் இரண்டரை ஆண்டில் 22,000 சம்பாதித்து அன்பருக்கு எதையும் கொடுக்காமல் ஏமாற்றி முதலைத் திருப்பித் தந்து விட்டான் கயவன்.
- டாக்டர் மகனால் துரோகம் செய்யப்பட்ட கயவன் அன்பருக்கு முழுத்துரோகம் செய்து முழு லாபம் 22,000-த்தையும் தானே எடுத்துக் கொண்டு புதுத் தொழிலாரம்பித்தான். 22,000 ரூபாயும் சொற்ப நாளில் மறைந்து விட்டது. கயவன் துரோகம் செய்த டாக்டர் மகனிடம் திரும்பிப் போய் விட்டான்.
- அன்பர் என்பதால் கயவனும் ஆரம்பத்தில் சுபீட்சம் பெற்றான். முடிவில் முழுமையாக துரோகப் பலனாக அழிந்தான்.
- அன்னை அருள் திருடனுக்கும், கயவனுக்கும், துரோகிக்கும் சுபீட்சம் பெறத் தவறாது.
- அது எந்த அன்பருக்கு நடக்கிறதோ அந்த அன்பருக்கு யோகம் பலிக்கும்.

**அது பூரண யோக வாயில்.**

**ஸ்ரீ அரவிந்த சுடர்**

பூரணயோகம் என்பதை ஆன்மா வளரும் யோகம் என்று பகவான் கூறுவதன் அர்த்தம், பிறவி எடுத்தது ஆன்ம மலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் ஆகும்; அது பலிப்பதே பிறவிப்பயன் அடைதல் என்று நாம் அறிய வேண்டும்.



## அஜெண்டா

**வலி அஞ்ஞானத்தின் ஆன்மீக முத்திரை.**

Volume III, Page 151

- பொங்கி வரும் சந்தோஷம் புத்துணர்ச்சியைக் குறிக்கும்.
- வெண்கலமாக உடலிருந்தால் உள்ளம் துள்ளி எழும்.
- வாழ்வில் விழையும்முன் தேவை பூர்த்தியானால் உலகமே சந்தோஷமாகத் தெரியும்.
- **அன்பான குடும்பம் வளமாக வாழும் பண்பான ஊரில் மனிதன் மகிழ்ச்சியாக இருப்பான்.**
- உடல், உயிர், வாழ்வு, குடும்பம், ஊர் நெறியானால் சந்தோஷத்திற்குக் குறைவிருக்காது.
- ஆத்மா இவற்றைக் கடந்தது.
- ஆத்ம விழிப்பு அனைத்தின் விழிப்பாகும்.
- ஆத்மா சந்தோஷமானால், உலகில் வலியில்லை எனத் தோன்றும்.
- உடலின் ஆத்மா விழித்தால் வலி தீண்டினால் இன்பமாக இருக்கும்.
- உயிரின் ஆத்மா விழிப்படைந்தால் எலிசபெத் திட்டுவது டார்சிக்கு இனிப்பது போல் இனிக்கும்.
- அறிவில் ஆத்ம விழிப்பிருந்தால், எந்தப் பிரச்சனையும் சந்தோஷத்தை உற்பத்தி செய்வதாகத் தோன்றும். அப்படியே புரியும்.
- உலகில் ஆனந்தம் மட்டுமிருப்பதாக ஆன்மீகம் கூறுகிறது.
- ஆனந்தம் மேல்மனத்தில் சந்தோஷம், பராமுகம், வலியாகப் பிரிகிறது.
- மனம் பாஸிட்டிவானால் எது சந்தோஷம் தருகிறதோ அதுவே மனம் நெகட்டிவாக இருக்கும் பொழுது வலி தரும்.

- வலியும் சந்தோஷமும் மனத்தைப் பொறுத்தது, விஷயத்தைப் பொறுத்ததில்லை.
- அஞ்ஞானம் என்றால் என்ன?
- நல்லதைக் கெட்டதாக அறியும் மனம் உண்டு.

எளிய பிரச்சனையை பயங்கரமான பிரச்சனையாக அறியும் பயம் உண்டு.

இல்லாததை இருப்பதாக அறியும் அனுபவம் உண்டு.

அனைவரும் சொல்வதால் உண்மை எனக் கொள்ளும் மனப்பான்மையுண்டு.

பெற்றோர் நல்லவர் என்பது நினைவு.

நண்பன் நல்லவன் எனக் கொள்ளும் மனப்பான்மையுண்டு.

நல்லது செய்தால் நல்லது வரும் என்ற சட்டத்தை மனம் ஏற்கும்.

சுடும்வரை நெருப்பு எனத் தெரியாததுண்டு.

உதவி செய்வது நல்ல காரியம் என்பது மனப்பான்மை.

ருசியான பண்டம் உடலுக்கு நல்லது என நினைக்கிறோம்.

இனிய சொல், நல்ல உள்ளம் எனக் கொள்வது சரியாகாது.

நடத்தையை நம்புவது நம் பழக்கம்.

கண்ணுக்கு மறைவாக நடப்பது எப்படித் தெரியும்.

பிறர் குறை மட்டும் தெரிவதுண்டு.

இலாபம் இலட்சியம் என அந்தரங்கக் குரல் எழும்.

குரு உயர்ந்தவர் என உலகம் கூறுவதை மனம் ஏற்கும்.

இவையனைத்தும் அஞ்ஞானத்தை அனுமதிக்கும் அனுபவம், வலி எழும் வழி.

## ஜீவிய மணி

**பிறவிப்பயன் அன்னையை அறிவது என்றால் ஆன்மாவுக்கு அது அதிர்ஷ்டம்.**



## சமூகம் நம்மைக் காக்கும் தாய்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

மூலம்: ஸ்ரீ கர்மயோகி

சொற்பொழிவு : திரு நாகராஜன், ராணிப்பேட்டை மையம்.

சொற்பொழிவு ஆற்றிய தேதி: 07/09/2014

அன்னை ஒரு அன்பரை நாகலிங்க மலர் கொண்டு வரும்படி கேட்டார். திருவுருமாற்றமும் கேட்டார். அவருக்கு அம்மலர்களை அன்று கொண்டு வந்தவனுக்குத் தினசரி 1 ரூபாய் கூலி. அவன் பல மாதம் நாகலிங்க மலர் ஏராளமாகக் கொண்டு வந்தான். பிறகு சிவந்த மலர் கிடைக்கவில்லையென வெண்மையான மலர் கொண்டு வந்தான். **வெண்மையான மலர் சுயநலமற்ற சுபீட்சமாகும்.** இன்று அவன் தினமும் 1,000 ரூபாய் சம்பாதிக்கிறான். பரம்பரையாக விஸ்வாசம் என்பதறியாத குடும்பத்தில் பிறந்தவன் என்பதால் அவனை அவன் முதலாளிக்கு எதிரி அணுகினார். அவன் அப்பொழுது முதலாளியை விட்டு நின்று பல வருடமாயிற்று. முதலாளிக்குத் தொந்தரவு தர அவருக்கு எதிரி அவனை அணுகினார். **எதிர்பாராதவிதமாக அவன் அவர் கூறியதைச் செய்ய மறுத்து விட்டான்.** மரமல்லிகை என்பது திருவுருமாற்றம். அம்மலர் கிடைக்காமல் ஒன்று அல்லது இரண்டு கிடைக்கும். பல நாட்கள் அவன் கொண்டு வந்த மலர் அன்னைக்குப் போயிருக்கிறது. விஸ்வாசமற்ற பரம்பரையில் பிறந்த அவன் திருவுருமாறி விஸ்வாசத்துடன் பேசினான். பழைய முதலாளியின் எதிரியிடம் கூறினான். ‘‘என் முதலாளிக்குத் துரோகம் செய்ய மாட்டேன். மேலும் அவருக்குத் தொந்தரவு கொடுக்க உங்களை அனுமதிக்க மாட்டேன்’’ என்றான். இது அன்னை அவன் ஆத்மாவின் அம்சத்தைத் திருவுருமாற்றித் தந்தது. 55 வயதில் ஒரு அமெரிக்கர் அமெரிக்கன் மேனேஜ்மெண்ட் அசோசியேஷனில் ஒரு வைஸ்-பிரசிடெண்ட்டாக இருந்தார். இதற்குமுன் இலண்டனில் ஒரு சர்வதேச மேனேஜ்மெண்ட் பத்திரிகைக்கு Copy Editor ஆசிரியராக இருந்தார். 15 ஆண்டுகள் இலண்டன் அனுபவம்

அமெரிக்காவில் இப்பெரிய பதவியைப் பெற்றுத் தந்தது. உயர் பதவி, அந்தஸ்து பெரியது. மொரார்ஜி தேசாய் பிரதமராக இருந்தபொழுது நியூயார்க் வந்தார். இவர் அவரை சந்திக்கப் பிரியப்பட்டார். அனுமதி கிடைத்தது. 1985-இல் இலட்சம் டாலர் அமெரிக்காவிலும் பெரும் சம்பளம். கல்லூரி பேராசிரியர்கட்கு 40 ஆயிரம் என்றால் இவர் பெறுவது அதைப் போல் 2½ மடங்கு. அதிகம் படித்தவர். 6 வயதில் ஒரு கதை எழுதினார். அதிலிருந்து ஒரு புத்தகம் வெளியிட ஆவல் கொண்டார். 50 ஆண்டுகள்வரை அது ஆவலாகவே இருந்தது. நிறைவேறவில்லை. Tom Peters என்பவர் In Search of Excellence என்ற புத்தகம் எழுதி 60 இலட்சம் பிரதிகள் விற்று பிரபலமானவர். நான் கூறும் அமெரிக்கர் தலைமையில் மாதந்தோறும் சொற்பொழிவுகள் நடக்கும். அதற்கு அமெரிக்கா-வில் முன்னணி Management Consultants வருவார்கள். அவர்களில் Tom Peters ஒருவர். அன்று 1984-இல் அவருக்கு $400 பீஸ். புத்தகத்தால் பிரபலமானபின் ஒரே ஆண்டில் Tom Peters-க்கு பீஸ் ஒரு நாளைக்கு $20,000 என உயர்ந்தது. இவற்றையெல்லாம் கண்ணுறும் அன்பர் ஒரு புத்தகம் வெளியிடும் ஆவல் நிறைவேறவில்லை என்பதைக் கண்டு வருத்தப்பட்டார். வாழ்வில் பெரும் அனுபவப்பட்டவர். இவர் அன்பரில்லை. வாழ்வு இவருக்கு ஒரு பரிசு தர முடிவு செய்தது. நம் சொஸைட்டி அன்பருடன் இணைந்து ஒரு நூல் எழுதினார். பிரஞ்சு, ஜெர்மன், டச், ஜப்பான், இத்தாலியன், ஸ்பானிஷ் என 7 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு பிரசுரமாயிற்று. அமெரிக்காவில் Best Seller எனப் பெயர் பெறும் அளவுக்குப் பிரதிகள் விற்றன. அதைத் தொடர்ந்து இவர் வேறு 3 புத்தகங்கள் எழுதினார்.

**சமூகம் தாய், அவள் கொடுப்பது ஏராளம். அதுவும் ஏழைமக்கட்கு வழங்குவது வரம். அதிர்ஷ்டமான காலங்களில் அதிகமாகப் பெறுவது ஏற்கனவே வசதியானவர்களே.**

இந்தியப் பணக்காரர்கள் சுதந்திரம் வந்தபின் பெரும் பணம் பெற்றனர். சமூகம் அவர்கட்கு தருவது இது.



**சமூகம் என்று ஒன்று இன்று இல்லாவிட்டால், நாம் பேச்சிழந்து ஊமையாகி, செயலிழந்து நடைப்பிணமாகி விடுவோம்** என்ற உண்மையை நாம் கருதுவதில்லை. ஒரே சமூகத்தில் பிறந்த தாழ்ந்த மக்களும், உயர்ந்த மக்களும் எவ்வளவு வேறு-பட்டுள்ளனர் எனக் காணும்பொழுது பெறுவதில் உள்ள வித்தியாசம் தெரிகிறது. ஒரு சமுதாயத்தினரை சமூகம் உயர்த்தியதும் அடுத்தவரை தாழ்த்தியதும் உண்மையே. ஒதுக்கப்பட்டதும், தாழ்த்தப்பட்டதும் உள்ளதே.

ஆனால் உள்ளதை நாம் முழுவதும் பெறுவதில்லை. சமூகம் தருவதை நாம் பெறும்பொழுதும் அதைச் சரியாகப் புரிந்து கொள்வதில்லை என்பதும் அடுத்த பெரிய உண்மை.

**கீழ்க்கண்டவை நாம் முக்கியமாகக் கருத வேண்டியவை:-**

- சில நாடுகள் உயர்ந்தும், மற்றவை தாழ்ந்தும் உள்ளன.
- உயர்ந்த நாடுகளுக்கு உயர்ந்த சந்தர்ப்பங்கள் இருந்தன.
- **பல நாடுகள் தாங்களே அரிய சந்தர்ப்பங்களை உற்பத்தி செய்து கொண்டன.**
- நாடுகளைப் போலவே ஒரு நாட்டில் ஜாதி அல்லது class வித்தியாசம் உண்டு.
- புதிய சந்தர்ப்பம் வரும்பொழுது வசதியுள்ளவனே அதிகமாகப் பெறுகிறான்.
- பெரியதும், சிறியதும் என்றும் உள்ள நிலை.
- காலம் மாறினாலும், அது மாறுவதில்லை.
- உலகத் தலைமை காலம் மாறும்பொழுது வெவ்வேறு நாடுகட்கு மாறுகிறது.
- **முழுவதும் தவறானவன் முழுவதும் தொடர்ந்த பெருவெற்றி பெறுகிறான்.**
- உயர்ந்ததும், தாழ்ந்ததும் மாறிமாறி வருகின்றன.
- ஒரு விஷயத்தில் உயர்ந்தவன் அடுத்த விஷயத்தில் தாழ்ந்து விடுகிறான்.

- சமூகம் வற்றாத ஊற்றான தாய். தடம் மாறினால் காளியாக மனிதனை அழிக்கும்.
- சமூகத்துடன் ஒட்டி வாழ்ந்தால் 100 ஆண்டில் பெறுவதை 10 ஆண்டில் பெறலாம்.
- இருண்டு, வறண்டிருந்த சமூகம், ஒளிமயமாகி, வளம் நிறைந்ததாக மாறி வருகிறது.
- சமூகமே இல்லையெனில் கல்வி என்பதே இருக்காது.
- சிறிய மனிதனுக்குப் பெரிய அனுபவம் தர சமூகம் தன் வளர்ச்சியைப் பயன்படுத்துகிறது.
- ஏராளமான பணம் பெற சமூகம் எல்லா வாயில்களையும் திறந்து வருகிறது.

  **சமூகம் தரும் வசதிகளில் மிகச் சிறியது பணம்.**

  மன நிறைவு, ஆத்ம விளக்கம், அறிவின் சிறப்பு, குடும்ப உயர்வு, ஊரிலும் வீட்டிலும் தரும் பாதுகாப்பு, பணத்தை- விட உயர்ந்தவை.
- சமூகத்தை அதிகமாக அறிந்தவன், வாழ்வை முழுமையாக அனுபவிப்பான்.
- தாயாராகவும், தகப்பனாராகவும் செயல்படும் சமூகம் தாயும், தகப்பனும் தர முடியாததெல்லாம் தரும்.
- கடந்தகால பொக்கிஷங்களை காத்து வைத்திருந்துத் தருவது சமூகம்.
- எதிர்கால ஏற்றங்களை நிகழ்காலத்தில் உற்பத்தி செய்வது சமூகம்.
- சமூகம் பரந்து விரிந்துள்ளது. அது ஆழ்ந்து, உயர்ந்துள்ளது.
- முழு சமூகத்தையும் பண்பு நிறைந்தவன் தன் குடும்பத்துள் காண்பான்.
- **ஆன்ம விளக்கமுள்ளவன், அகத்துள் (மனதில்) அதையே காண்பான்.**
- மொழி, பண்பு, பழக்கம், நோக்கம், கல்வி, கருத்து, பதவி, பட்டம் ஆகியவற்றை நாம் சமூகத்திலிருந்தே பெற்றோம்.



- சமூகம் தாய் என்பது உண்மை: **உயர்ந்த மனிதன் உள்ளத்தால் சமூகத்திற்குத் தாயாவான்.**

சமூகம் அமுதசுரபி, காமதேனு, கற்பக விருக்ஷம், தாய், தகப்பன், குடும்பம், ஊர், உலகம் அனைத்துமாகும். இன்றைய சூழ்நிலையில் சமூகத்திற்கு ஒரு உதாரணம் கூற வேண்டு- மானால் அது எலக்ட்ரிசிட்டி. விளக்கு எரிவது, பேன் சுழல்வது, **A.C.,** பிரிஜ் வேலை செய்வது, அடுப்பு எரிவது வீட்டில் காண்கிறோம். எலக்ட்ரிசிட்டியில்லாவிட்டால் ஊர் இரவில் இருண்டு போகும். ரயில் ஓடுவதும், கார் ஸ்டார்ட் செய்வதும், போன் பேசுவதும், கம்ப்யூட்டர் செயல்படுவதும், ஆலைகள் இயங்குவதும் எலக்ட்ரிசிட்டியால். அது செய்யும் வேலைகளைச் சொல்லி முடியாது. ஆனால் ஷாக் அடிக்கும். கையால் தொட்டுவிட்டால் உயிர் போகும். மனிதனை வாழ வைப்பது சமூகம். சமூகம் தாய் என்றாலும் சமூகத்திற்குள்ள சக்தி தாய் போல மட்டும் செயல்படுவதில்லை, அது ஒரு சக்தி. நாம் அதைச் சரியாகப் பயன்படுத்தினால் தாயாக செயல்படும். சமூகத்தை அறியாமல், நீச்சல் தெரியாதவன் நீரில் இறங்கு- வதைப் போலிறங்கினால் உயிர் போவதைப் போல், அதைத் தவறாக அணுகினால் ஏராளமான அதன் சக்தி எதிராகச் செயல்படும். உயிரும் போகும். நிலைமை மீறினால் சமூகம் ஊரையும் அழிக்கும். பிரெஞ்சுப் புரட்சியில் சுமார் 10 ஆண்டுகள் சமூக சக்திகள் கட்டவிழ்ந்து **terror** பயங்கரம் நிலவியது. இந்து-முஸ்லீம் கலவரத்திலும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலும் அது போன்று ஆபத்தான சூழ்நிலையை நாம் இந்நாட்டில் கண்டோம்.

கடப்பாறை வாங்கிக் கொண்டிருந்தவனை கட்டியிழுத்துப் போய் காபினட் மந்திரியாக்கும் சக்தி சமூகத்திற்குண்டு. வன்னியர், **M.A.** பட்டம் பெற்ற வன்னியர் என்ற காரணத்தால் பூவராகன் மந்திரியானாலும் அதைச் செய்தது சமூகம். தண்டோரா போட்ட தொண்டர் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவராகி, முதன் மந்திரியாகவும், அகில இந்திய காங்கிரஸ் தலைவராகவுமானதும், இந்திய பிரதமரை நியமித்ததும் அவர்

திறமையாலும், நாணயத்தாலும் என்றாலும், எப்படிச் சமூகம் அவரை ஒவ்வொரு கட்டத்திலும் ஆதரவு அளித்து உயர்த்தியது என்பதைக் கண்டால், நமக்குச் சமூகம் எப்படிப்பட்ட கடலென விளங்கும். சமூகம் செய்யும் பல பெரிய காரியங்களைத் தனி மனிதனோ, ஒரு ஸ்தாபனமோ செய்ய முடியாது. சர்க்கார் மூலம் சமூகம் ரோடு போடும். மின்சாரம் உற்பத்தி செய்து விநியோகம் செய்யும். அது போல் அளவிறந்த காரியங்களை சர்க்கார் மூலம் செய்யும். சமூகத்தின் அனுமதியின்றி சர்க்காராலும் இது போன்ற பெரிய காரியங்களைச் செய்ய முடியாது.

ஒரு வகையில் சர்க்காரே பல காரியங்களில் சமூகமாகத் தென்பட்டாலும், **சமூகம் சர்க்காரைவிடப் பெரியது, அதிக சக்தியுள்ளது.**

எந்தச் சர்க்காரும் ஒரு சமூகத்தை, பண்பை உற்பத்தி செய்யக் கட்டாயப்படுத்த முடியாது.

சர்க்கார் மக்களை ஒரு மதத்தைத் தழுவக் கட்டாயப்படுத்தலாம்.

ஆனால் மதத்தை இதுவரை உற்பத்தி செய்த சர்க்காரில்லை.

நாட்டின் பண்பு, கலாச்சாரம், மதம், இலக்கியம், கலை, ஓவியம் போன்றவற்றை உருவாக்குவது சமூகம்.

வாழ்வு விரிவடைந்தால் உரைநடை வளரும். சமூகம் உயர்ந்து சிறப்படைந்த நிலையில் நெடுநாள் நிலைத்திருந்தால் காவியம் (Poetry) உற்பத்தியாகும். எலிசபெத் மகாராணியின் ஆட்சியில் ஆங்கில இலக்கியம் தழைத்து, ஷேக்ஸ்பியர் உற்பத்தியானதை இதற்கு உதாரணமாகக் கூறுவார்கள். பிரெஞ்சு மொழி பிரபலமானதும், பிரெஞ்சு பாஷனை உலகம் முதன்மையானதாக ஏற்றதும், பிரெஞ்சு சாப்பாடு, டிரஸ் உலகெங்கும் பரவியதும் பிரெஞ்சு சமூகத்தால்தான்.

**சமூகம் கலாச்சாரத்தின் தாய்.**

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் என்பது சமூக சக்தியின் முழுமையை எதிரான சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்டுவதாகும். இந்த சமூகத்தின் அடிக்கல்லாக (unit) விளங்குவது குடும்பம். அக்குடும்பத்தின் ஜீவனாக



செயல்படுவது பெண். பெண்மையின் உயிர்நாடி தூய்மை, தாய்மை, சிருஷ்டித்திறன், நேர்மை, நியாயம், நிர்ணயம். ஆணுக்கு இவ்வுயர்வுகள் எல்லாமிருக்கலாம். ஆனால் அது மின்சாரம் விசிறியுள் நுழைந்தால் விசிறும். ஒளி எழாது. ஒளி எழவேண்டுமானால் மின்சாரம் விளக்குக்குள் நுழைய வேண்டும். உயர்ந்த குணங்களை உலகம் பெற வேண்டு-மானால் அவை பெண்மை வழியாக அடுத்த தலைமுறையை எட்ட வேண்டும்.

(முற்றும்)

## ஜீவிய மணி

நீதி காலத்துக்குக் காலமும், நிலைக்கு ஏற்பவும் மாறும். உடலுக்கு உரிய நீதியும், உணர்வுக்கு உரியது, ஆன்மாவுக்கு உரியதும் வேறு; அன்னைக்கு உரிய ஆன்மீக நீதியும் வேறு. நான் உன்னிலும், நீ என்னிலும் இருப்பது ஆன்மாவுக்கு உரிய நீதி. சமூக நியதி, சர்க்கார் சட்டம், தர்மம், நியாயத்தைக் கடந்து ஆன்மாவுக்கு எது நல்லதோ அதைச் செய்வது அன்னையின் ஆன்மீக நீதி. அன்னை ஆசையைப் பூர்த்தி செய்து அதை அழிக்க உதவுகிறார். மனிதனை, அவன் உள்ள நிலையில், அவன் ஆன்மீகத்தை நோக்கி வளர வழி செய்கிறார். தாழ்ந்த ஆசையைப் பூர்த்தி செய்யும் பொழுதும், அதனுள் கலந்துள்ள உயர்ந்த அம்சத்தை வளர்ப்பதன் மூலம் அன்னை செயல்படுவதே அன்னையின் நீதி. பயன்பெறும் மனிதன் தாழ்ந்த குணங்களை வளர்த்து அனுபவித்துக் கொண்டேயிருக்க முயன்றால், அன்னை பூர்த்தி செய்யாமல் விலகுகிறார். அன்னை விலகியவுடன் அவன் தவறு அவனையே தண்டிக்கிறது. அன்னை தண்டிப்பதில்லை. அன்னையின் நீதி பரம்பொருளின் நீதி. இருளை அழித்தும், அடக்கியும், வளர்த்தும், ஒளியை வளர்ப்பதே அன்னை ஆன்மா என்ற ஒளிக்கு அளிக்கும் நீதி.

# அன்பர்களின் அன்றாட வாழ்வில் அன்னையின் பிரத்யட்சம்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

கர்மயோகி

**3. விட முடியாத குறையை விட்டுவிடுகிறேன்:**

நாள் தவறாமல் இரண்டு சினிமாப் பார்க்கும் பட்டதாரி. யாரையும் பார்த்துப் பேச விரும்பமாட்டார். நீங்கள் எந்த ஊர்? உங்கள் தகப்பனார் யார்? என்று கேட்டுவிடுவார்களோ என அஞ்சி விலகி இருந்தவர், சினிமாப் பார்ப்பதையே அறவே நிறுத்த முன்வந்தார். ஊரில் பிரபலமானார். ''ஜில்லாவில் உங்கள் பெயர் தெரியாதவர் இல்லை'' என்று ஊரில் உள்ள பெரிய மனிதர் அவரிடம் சொல்லும் அளவுக்கு அவர் வாழ்க்கை மாறியது. டெல்லிக்கும், காஷ்மீருக்கும், வாஷிங்டனுக்கும் அவர் சேவையும், பெயரும் எட்டின.

**4. செயல் சிறப்படைய உழைப்பேன்: (Will aim at perfection in work):**

சர்க்கார் உத்தியோகத்தில் இருந்த என்ஜினீயர், எந்த வேலை கொடுத்தாலும் சிறப்பாகச் (perfect) செய்ய முழுமுயற்சி எடுப்பார். எக்ஸிகியூடிவ் என்ஜினீயராக இருக்கும்போதே அவருடைய வேலையின் சிறப்பின் காரணமாக மாநிலத்தில் முதன்மை பெற்றார். அவர் புகழ் டெல்லிக்கும் எட்டியது. சர்க்கார் சம்பளம் 2,000 ரூபாய் இருக்கும்பொழுது ரூ.15,000 சம்பளத்திற்கு வெளிநாட்டில் வல்லுநராகப் (expert) போக வேண்டும் என அடுத்த மாநிலத் தலைமை என்ஜினீயர் அவரை நேரே வந்து அழைத்தார். ஒரு கடமையில் சிறப்பை நாடி அதை அடைபவருக்கு, வாழ்க்கையின் உச்சகட்டச் சிறப்பும், புகழும் வர முடியும் என்பது உயர்மட்ட அனுபவம் உள்ளவர்களுக்குத் தெரியும். அத்தகைய அன்பர்களை அன்னை அரவணைத்துக் கொள்வார்.



**5. முயன்றால் முடியாதது ஒன்றில்லை:**

1952-இல் எந்தக் கட்சிக்கும் சென்னை அசெம்பிளியில் மெஜாரிட்டி இல்லை என்றபொழுது ராஜாஜியை முதன்மந்திரி-யாக்க மத்திய, மாநிலத் தலைவர்கள் முயன்று, முடியாது என்று கைவிட்டபின் C. சுப்ரமணியம், தான் முயல்வதாகச் சொல்லி, முயன்று வெற்றி பெற்றார். மத்திய சர்க்காரில் உணவு இலாகாவில் மந்திரியானவர்களுடைய அரசியல் வாழ்வு முடிந்துவிட்டதென பெயர் பெற்றுவிட்டது. 1964-இல் லால்பகதூர் பிரதமரானபின் உணவு இலாகாவை ஒத்துக்-கொள்ள எவரும் முன்வரவில்லை. சுப்ரமணியத்தை சாஸ்திரி கேட்டார். முயன்றால் முடியாதது ஒன்று இல்லை என்ற கொள்கையுடையவர் சுப்ரமணியம்; ஏற்றுக்கொண்டார்; முயன்றார்; வெற்றி மட்டும் கிடைக்கவில்லை; நாட்டின் உணவுப் பிரச்சனையை நிரந்தரமாகத் தீர்க்கும் வகையில் பசுமைப் புரட்சியை ஆரம்பித்து வெற்றி கண்டார்.

**6. ஒருவரால் முடியுமானால், என்னாலும் முடியும்:**

இராமாபுரம் கிராமத்தில் எவரும் போர்கிணறு (borewell) தோண்ட முன்வராதபோது இராமசாமி முன்வந்தார். அவரால் முடியும் என்றால், என்னாலும் முடியும் என்று அனைவரும் முன்வந்தனர். அதன் விளைவாகப் பயிரில் பலன் ரூ.200-லிருந்து ரூ.20,000 ஆயிற்று. மற்றவர் ஒருவரால் செய்யக்கூடிய ஒன்றை நாமும் முயன்று செய்யலாம். அதற்குப் பெரும்பலன் உண்டு.

**7. எந்த விஷயத்திலும் நுணுக்கம், இரகஸ்யம் என்றுண்டு. அதைக் கண்டுபிடித்தபின் அந்த விஷயத்தில் வெற்றி நிச்சயம்:**

5 வகுப்புப் படித்துத் தமிழாசிரியராக இருந்த ஒருவர் B.A. பட்டம் பெற 1950-இல் பிரியப்பட்டார். விளைவு, அனைவரும் அவரைக் கேலி செய்தனர். முயற்சியைக் கைவிட்டுவிட்டார். அடுத்த ஆண்டு அவர் ஒரு இளைஞரைச் சந்தித்தார். தாம் கைவிட்ட எண்ணத்தை அவரிடம் சொன்னார். மொழியியலில்

உள்ள நுணுக்கங்களை அறிந்தவர் இளைஞர். அந்த நுணுக்கங்களைப் புரிந்துகொண்டு **B.A.** பட்டத்திற்குரிய ஆங்கிலப் படிப்பை மேற்கொண்டால் அது வெற்றி பெறும் என விளக்கினார். ஒரு மொழியில் சில வாக்கிய அமைப்புகள் **(sentence structures)** உண்டு. ஆங்கிலத்தில் அத்தகைய அமைப்புகள் 5, 6-தான் இருக்கின்றன. அவற்றைப் புரிந்து-கொண்டு தேவையான பயிற்சியை மேற்கொண்டால் ஆங்கிலம் எளிமையாகும் என்றார். தமிழாசிரியர் அதை ஏற்றுக்கொண்டார். நுட்பத்தை அறிந்து கொண்டார். மகிழ்ச்சி அடைந்தார். **B.A.**-க்கு விண்ணப்பித்தார். பயிற்சியை மேற்கொள்ள மறுத்தார். 2 முறை தவறி மூன்றாம் முறையாக பட்டம் பெற்றார். பின்னர் **M.A.**-யும் பெற்றார். **B.T.**-யும் பெற்றார். தலைமையாசிரியரானார். விருதும் பெற்று ஓய்வு பெற்றார்.

படிப்பு, நோய், பிள்ளைகளை வளர்த்தல், தொழில், பணம், அரசியல், பொதுவாழ்வு, உயர்ந்த நன்மை, தாழ்ந்த தீமை, எவற்றிலும் ஓர் உட்கருத்தான நுட்பம் உண்டு. அனுபவத்தில் அதைத் தெரிந்து கொள்ளலாம். அறிவால் சீக்கிரத்தில் உணரலாம். வாழ்வில் பலன் அளிக்கக் கூடியவை அவை. அன்னை வழிபாட்டில் சிறப்பைக் கொணர்ந்து சேர்க்கும் திறன் அதற்குண்டு.

**8. எதிர்மறையான கருத்திலும் உண்மையிருக்கிறது என்று ஏற்றுக்கொள்கிறேன்:**

பகவான் ஸ்ரீ அரவிந்தர் தாம் எழுதிய பெரிய நூல்களை எல்லாம் 1914-இல் ஆரம்பித்து, 1919, 20-இல் எழுதி முடித்துவிட்டார். இதுவும் அவர் எழுத வேண்டுமென திட்டமிட்டதன்று. அன்னையும், அவருடைய கணவரும் ஸ்ரீ அரவிந்தரை முதலில் சந்தித்தபொழுது, ''உங்களிடம் உள்ளது பெரிய பொக்கிஷம். அதை உலகுக்கு நீங்கள் எழுத்தின் மூலம் அளிக்க வேண்டும்'' எனக் கேட்டதன்பேரில் அந்த நூல்களை எழுதினார். அந்த எல்லா நூல்களையும் முறையாக வேதம் எனக் கருதி பயின்று, அதன் சாரத்தைப் பூரணமாக உணர்ந்து, ஆன்ம ஞானத்தைப் பெற்றவர் ஒருவர்



பகவானுடைய சிறிய நூலாகிய **(Thoughts and Aphorisms)** கருத்துகளும், பொன்மொழிகளும் என்ற கருத்துடைய தலைப்பில் உள்ளதைப் படித்தால், ஸ்ரீ அரவிந்தருடைய மூல நூல்களில் பல ஆயிரம் பக்கங்களில் உள்ளதை 540 வரிகளில் இங்கு கூறியிருக்கிறார் என்பது விளங்கும். இந்நூலை மட்டுமே பகவான் எழுத விரும்பினார்போலும். 1913-இல் இதை எழுதியிருக்கிறார். மேலும், இவருடைய மூல நூல்களில் இல்லாத சில பெரிய கருத்துகளையும் இதில் கோடி காட்டியவாறு குறிப்பிடுகிறார். இந்நூலை எழுதி முடித்தபின் 7 வரி பிற்-சேர்க்கையாக உள்ளது. அதில் முதல் கருத்து, ''நான் சொல்லியவை எல்லாம் உண்மையானாலும், இவற்றின் எதிர்மறையும் உண்மையே'' என்பது.

விவேகிகள் அறிந்த உண்மை இது. தத்துவரீதியாக இந்தக் கூற்றை ஆராய்ச்சி செய்வதை விட்டு, அன்பர் வழிபாடு, பிரச்சனைகளைத் தீர்த்தல் என்ற (context) நிலைகளில் மட்டுமே இதைப் பார்ப்போம்.

இங்கிலாந்தில் எல்லாத் துறைகளுக்கும் சங்கம் இருப்ப-துண்டு. மது அருந்துபவர்களுக்குச் சங்கம், மது அருந்தா-தவர்களுக்குச் சங்கம் **(Teetotaller)**. ஓர் ஆண்டு விழாவை மது அருந்தாதவர்கள் சங்கம் கொண்டாடியது. பலர் மதுவின் கொடுமையைப் பற்றிப் பிரசங்கம் செய்தனர். முடிவில் தலைவர் சுருக்கமாக உறையாற்றினார்: ''என் உடல் ஆரோக்கியத்தைப் பாருங்கள். எனக்கு வயது 65. இந்தத் திடகாத்திரமான ஆரோக்கியத்திற்குக் காரணம் நான் அதைத் தொட்டதேயில்லை'' என்றார். பலத்த கரகோஷம். ஒருவர் எழுந்தார். தமக்குப் பேச அனுமதி கேட்டார். செழிப்பான உடல்நலம் பெற்ற அவருக்கு வயது 70. மேடைக்கு வந்தார். ''என் செழிப்பான உடல் நலத்தைப் பாருங்கள். நான் மதுவைத் தவிர வேறு எதையும் தொட்டது இல்லை'' என்றார். ஓர் உண்மைக்கு எதிரான கருத்தும் உண்மையாக இருக்கும். எல்லாத் துறைகளிலும் இதற்கு உதாரணம் கொடுக்கலாம். நம் பிரச்சனை வேறு. நம் மனத்திலுள்ள கருத்துக்கு எதிர்மறையான கருத்தின் உண்மையை ஏற்றுக்கொண்டவுடன் மனம் பரந்து

விசாலம் அடைகிறது. விசால புத்தி ஏற்பட்டால் தெளிவு பெருகும். பிரச்சனைகளை ஏற்படுத்திய சின்ன புத்தி அழிந்து, பிரச்சனைகள் அழியும். மனம் பக்குவம் அடையும். வழிபாட்டுக்குரிய திறனைப் பல மடங்கு அதிகரிக்கும். பிரச்சனைகளை அழிக்கும் திறன் வலுவடையும். இந்த முறையை நடைமுறையில் எப்படிக் கையாள்வது? இதனால் வழிபாட்டை வகுத்துக்கொள்வது எப்படி? பிரச்சனைகளை இதனால் எங்ஙனம் விலக்கலாம்?

நாத்திகர்களாக வாழ்க்கையைத் தொடங்கி, கடைசிக் காலத்தில் திருவாசகமும் கையுமாக உள்ளவர்கள் உண்டு. பூஜை, ஸ்தோத்திரம், அனுஷ்டானத்தில் அதீத படிப்போடு இளமையில் இருந்தவர்கள், ஓய்வு பெற்றபின் சந்தியாவந்தனம் கூடச் செய்யாமல் இருப்பதுண்டு. மறைமுகமாக மேற்கூறிய உண்மையை ஓரளவுக்குச் சுட்டிக்காட்டும் உதாரணங்கள் இவை.

ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தர் வேலையை விட்டுவிட்டு, தொழிலை ஆரம்பித்தார். முதல் ஆண்டு ரூ.80,000 விற்பனையாயிற்று. அவருடைய தகப்பனார் ரூ.100 பென்ஷனுடன் ஓய்வு பெற்றவர். அவர்கள் குடும்பத்திலும், ஊரிலும் தகப்பனாருக்கு ஓர் உயர்ந்த அந்தஸ்து உண்டு. வீட்டிலும் அளவுகடந்த மரியாதையுண்டு. தகப்பனார் சொல்லை ஊரில் அனைவரும் அப்படியே ஏற்றுக் கொள்வார்கள். வீட்டில் அவருடைய சொல்லே வேதவாக்கு. ரூ.900 வருவாய் வரும் சர்க்கார் வேலையை விட்டு, சொந்தமாகத் தொழில் நடத்தினார். முதல் ஆண்டு ரூ.80,000 விற்பனையாகி, ரூ.25,000 இலாபம் நின்றது. லைசென்ஸ் எடுக்க, டெண்டர் போட, புது ஆள் வைக்க, எல்லாக் காரியங்-களுக்கும் தகப்பனார் சொல்லே கடைசி. அடுத்த ஆண்டு வியாபாரம் பெருகியது. சில ஆண்டுகளில் வியாபாரம் 20 இலட்சத்தைத் தாண்டியது. தகப்பனார் யோசனைக்கும், வியாபார நிர்ப்பந்தங்களுக்கும் ஒத்துவரவில்லை. ஆயிரம் ரூபாய் தகப்பனாருக்குப் பெரிய தொகை. ஒன்றரை இலட்சம் டெண்டர் என்றால் தகப்பனாருக்கு அதிர்ச்சியாயிருக்கிறது.



மகனுக்கு மனதில் போராட்டம். தொழிலை விட்டாலும் விட்டுவிடுவாரேயொழிய, தகப்பனார் அபிப்பிராயத்தை எதிர்த்துப் போக முடியவில்லை. மனப் போராட்டத்தில் சில ஆண்டுகள் கழிந்தன.

''உங்கள் தகப்பனாருக்கு மரியாதை செலுத்துவது சரி. அவருடைய எண்ணங்களை இன்றையத் தொழிலில் அமுல்-படுத்த முடியாது'' என்று எல்லோரும் சொன்னார்கள். இவருக்கு என்ன நல்ல யோசனை சொல்லலாம் என அவர் நண்பர்கள் என்னைக் கேட்டார்கள். அவர்களிடம் நான், ''தகப்பனார் சொல்வது சரி. அதற்கு எதிரானதும் சரி. மகன் எதிர்மறையான உண்மையை ஏற்றுக் கொண்டால் தொழில் வளரும்'' என்றேன். இந்தக் கருத்தை அவரால் ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ள முடிந்தது. அதே சமயம் அவர் தகப்பனார், ''எனக்கு ரூ.200 என்றால் பெரிய தொகை. நீ 2 இலட்சம், 3 இலட்சம் என்று பேசுகிறாய். எனக்குப் பயமாயிருக்கிறது. இனி, தொழிலில் நீ அனுபவம் உடையவனாகிவிட்டாய். நீ சொல்வது சரியாக இருக்கும். என்னைக் கேட்காதே'' என்றார். மகனுக்கு மனப்போராட்டம் விலகியது. சில ஆண்டுகளில் வருஷச் செலாவணி 60 இலட்சமாயிற்று.

எந்தப் பிரச்சனையானாலும், அதைத் தீர்க்க வழியில்லா விட்டால் நம் கருத்துக்கு எதிரான கருத்தில் உண்மையுண்டா எனச் சோதனை செய்யும் மனப்பான்மையுள்ளவர்களுக்கு வழி பிறக்கும்.

**9. முயற்சி செய்யாமல் அழிவதைவிட, முயற்சி செய்து தோல்வியடைந்தால் சிறப்பு:**

**Harper and Raw** என்பது அமெரிக்காவில் பெரிய புத்தக வெளியீட்டுக் கம்பெனி. அவர்கள் நூற்றுக்கணக்கான புத்தகங்களை வெளியிடுகிறார்கள். பல்கலைக்கழகம், ஆராய்ச்சி நிறுவனங்களுக்குப் போய் அங்குள்ள **(Ph.D thesis)** டாக்டர் படிப்பு ரிப்போர்ட், சர்வே ரிப்போர்ட் **(survey report)** போன்றவற்றைப் பரிசீலனை செய்து, சிலவற்றை வெளியிடுவது ஒரு பழக்கம். இம்மாதிரி வெளியீடுகள் 10, 12

முதல் ஆயிரம் பிரதிகள் வரைதான் விற்கும். ஒரு சமயம் மக்கின்ஸி கம்பெனியின் ரிப்போர்ட் ஒன்றைப் படித்து, அதை வெளியிட வேண்டி எழுதியவராகிய பீட்டர்ஸ் என்பவருக்குக் கடிதம் எழுதினார்கள். பீட்டர்ஸின் அந்த ரிப்போர்ட் கம்பெனியிலேயே எல்லோரும் ஒத்துக்கொண்ட ஒன்றன்று. ‘‘நீங்கள் வெளியிடுவது பற்றி எனக்கு ஆட்சேபணை இல்லை. ஆயிரம் பிரதிகூட விற்காது என்பதே என் அபிப்பிராயம்’’ என பீட்டர்ஸ் பதில் எழுதினார். கம்பெனியார் 10 ஆயிரம் பிரதி விற்கும் என்று கருதி வெளியிட்டார்கள். 3 ஆண்டுகளில் அந்தப் புத்தகம் 50 இலட்சம் பிரதிகள் விற்பனை ஆயின. தாம் எழுதிய ரிப்போர்ட்டின் திறன் தமக்கே தெரியவில்லை. இது சமீப காலத்து நிகழ்ச்சி.

ஒரு கெஜட் பதவி உத்தியோகஸ்தரை அவர்கள் இலாகா டைரக்டர் 1965-இல் **(oust)** வேலை நீக்கம் செய்தார். எல்லோரும் அவரை டைரக்டருக்கு மேலே செக்ரடரிக்கு அப்பீல் செய்யச் சொன்னார்கள். ‘‘எங்கள் இலாகாவில் கடந்த 20 ஆண்டுகளாக டிபார்ட்மெண்டில் நினைவு இருக்கும்வரை டைரக்டருக்கு எதிராக செக்ரடரிக்குச் செய்த அப்பீல் மனு ஒன்றுகூட பலிக்கவில்லை. எதற்கு நான் அப்பீல் செய்வது’’ என்றார். கடைசியில் ஒருவாறாக அப்பீல் செய்தார். 3-ஆம் நாள் மீண்டும் வேலையில் அமர்த்த செக்ரடரி ஆர்டர் போட்டுவிட்டார். ‘‘டைரக்டர் செய்தது தவறு. அவரைத் தண்டிக்க வேண்டும். அப்பீல் மனு வந்தால் உடனே ஆர்டர் போடலாம்’’ என செக்ரடரி காத்துக்கொண்டிருந்ததாகப் பின்னர் தெரியவந்தது.

நம் நிலையில் முழு நியாயம் இருந்தாலும், பெரிய உண்மை இருந்தாலும், சத்தியம், நேர்மையிருந்தாலும், பல சந்தர்ப்பங்களில் நாம் வாயைத் திறக்கவே முடியாது. காலம் நடைமுறைக்கே. பணம் பேசும். பெரிய இடம் நிற்கும். ஏழை சொல் அம்பலம் ஏறாது.

செல்வாக்கின் எதிரே நின்று போராடச் சக்தியில்லை என்ற நிலைமையிலும்கூட கேட்காமல் அழிவதைவிட, கேட்டுவிட்டே தோல்வி அடையலாம் என்ற மனநிலைக்கு வாழ்க்கையில் சில சமயங்களில் பலன் கிடைப்பதுண்டு.



அன்னையிடம் அந்த மனநிலைக்குத் தவறாமல் நூற்றுக்கு நூறு பலன் கிடைக்கும். தனக்கென்று இருந்த அத்தை மகளுக்கு **I.A.S.** மாப்பிள்ளை வந்தபின், இந்த **B.A.** கிளார்க்குக்குப் பேச்சேது என்பது ஒரு சந்தர்ப்பம். கோயங்காவே **M.P.** சீட்டுக்கு நின்று விமானம் மூலம் விளம்பரம் செய்யும்போது, கோர்ட்டுக்குப் போகாத வக்கீலுக்கு ஜெயிக்க சந்தர்ப்பம் ஏது? அட்வான்ஸ் இல்லாமல் ரூ.50,000-த்திற்குக் கிரயப் பத்திரம் எழுதியாயிற்று. 4 மாத காலாவதி ஆகப்போகிறது. கிரயத்துக்கான ரொக்கம் கிடைக்கவில்லை. ரொக்கம் கொடுக்காமல் கிரயப் பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்து கொடு என்று எப்படி வாய் வந்து கேட்பது. இது நடக்காது. நடக்கவே நடக்காது என்று பகுத்தறிவுக்கும், நாட்டு வழக்கத்திற்கும் பூரணமாக, நிதர்சனமாகத் தெரிந்தாலும், நம்மிடம் உண்மையிருந்தால், மனதில் சத்தியம் இருந்தால், சந்தர்ப்பத்தின் நிலையை ஒதுக்கிவைத்துவிட்டு முயன்று பார்ப்பதில் தவறில்லை. அன்னை பக்தர்களுக்கு அது நல்ல முயற்சி. தவறாது பலிக்கும்.

தொடரும்...

❀❀❀

## ஸ்ரீ அரவிந்த சுடர்

பொய் என்பதை நாம் விலக்குகிறோம். மெய்யைப் போற்றுகிறோம். ஸ்ரீ அரவிந்தம் கூறுவது: பொய் மெய்யின் மாறிய உருவம். மெய் தன்னைத் தன்னுள் மறைத்துப் பொய்யாயிற்று. அதனால் பொய் மெய்யைவிட அதிக சக்தி வாய்ந்தது. மெய்யால் வாழ்பவன் செய்யும் முயற்சி பெரும் பலன் தரும். அதே சமயத்தில் பொய்யால் வாழும் ஒருவன் தன்னை மெய்யாகத் திருவுரு மாற்றி, முன்னேற முடிவு செய்தால், அவன் முன்னேற்றம் மெய்யின் முன்னேற்றத்தைவிட 10 மடங்கு, 100 மடங்கு பெரியதாக இருக்கும். இதே கருத்தை ஸ்ரீ அரவிந்தர் வேறு வகையாக –

*அறியாமை அறிவைவிட உயர்ந்தது* என்கிறார்.

## அன்பர் அனுபவம்

**P.** நடராஜன்

ஸ்ரீ அன்னையை அறிந்தவுடன், அவரை எப்படி வழிபடுவது என்பதே நம்முள் எழும் கேள்வி. ஆனால் அன்னையோ, "I do not want to be worshipped. I have come to work, not to be worshipped" என்று கூறியிருக்கிறார்கள். ஸ்ரீ கர்மயோகி அவர்கள், தம் நூல்களில் அன்னை செயல்தெய்வம், இடையறாது செயற்படும் சக்தி என்று எழுதியிருக்கிறார்கள். ஒழுங்கு, சுத்தம் முதலான வாழ்க்கை நெறிகளை அன்பர்கள் வழிபாடு என்ற தலைப்பில் பட்டியலிட்டு உள்ளார்கள்.

அத்தகைய அன்னையின் உயர் பண்பு நெறிகளை மேம்போக்காகப் பின்பற்றினாலோ, நம்மைச் சுற்றி உள்ளவர்களை அதிகாரம் செய்து, நான் அன்னை அன்பன் இதை இப்படித்தான் செய்யவேண்டும் என்று பணித்தாலோ கிடைப்பது அடுத்தவர்களின் அருவருப்பும் அடியும்தான் என்பது என் அனுபவம்.

மாறாக, ஸ்ரீ அன்னையின் **Do not pretend—be.**

**Do not promise—act.**

**Do not dream—realise** என்ற வாக்கின்படி அந்நெறிகளை நம் இயல்பாக மாற்றிப் பக்குவமாக அன்றாட வாழ்வில் வானில் உள்ள நிலவு தரையிலுள்ள தடாகத்தில் பிரதிபலிப்பதைப் போன்று பிரதிபலித்தால் அன்னையின் அருட்தடங்களை அனைத்திலும் பார்க்க முடிந்தது.

அப்படி அன்னையின் முறைகளைப் பிரதிபலித்த அன்பர்கள் இருவரின் ஆரம்பக் கால அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள விழைகிறேன்.

**ஒழுங்கு - Orderliness என்பதை Token Act-ஆகச் செய்த அன்பரின் அனுபவம் அவர் கூறியது:**

வீட்டில் இருந்த நியூஸ் பேப்பர்களை தமிழ்ப் பேப்பர் தனியாக, இங்கிலீஷ் பேப்பர் தனியாக அடுக்கினேன். மேலும்



முழு மாதப் பேப்பரையும், தேதிப்படி வரிசையாக அடுக்கினேன். மேலும் ஒழுங்கை உயர்த்த வேண்டி, ஒவ்வொரு தேதிப் பேப்பரையும் பக்கப்படி வரிசைப்படுத்தி, மடிப்புகளைச் சீர்படுத்தி, சுருக்கமாகச் சொன்னால், புதிய பேப்பர் எப்படி இருக்குமோ அதுபோல் அடுக்கி வைத்தேன்.

அப்பா புத்தகத்தில் குறிப்பிட்டபடி நான்கு நாட்களுக்கு முந்தைய பேப்பர் என்றால், நாலாவது பேப்பரை வரிசைப்படி எடுத்தால் சரியாக இருக்கும்படி அடுக்கினேன்.

பொதுவாக தமிழ்ப் பேப்பர்களுக்கு பழைய பேப்பர் கடையில் விலை இல்லை. பொதுவாக அந்நாட்களில் தமிழ்ப் பேப்பரை எடுத்துக் கொள்ள மாட்டார்கள். சும்மாக் கொடுக்காமல் கிலோ ஐம்பது பைசா என எடுப்பார்கள்.

அதனால், மளிகைக் கடைக்குச் செல்லும்போது, மேற்சொன்னபடி அடுக்கிய பேப்பர்களை நன்கு கட்டி எடுத்துக்கொண்டு, சும்மாக் கொடுப்பதைத் தெரிந்த கடையில் கொடுப்போம் என்ற எண்ணத்தில் போனேன். மளிகை சாமான்கள் பில்லில் பேப்பருக்கு என்று விலை குறிப்பிட்டு கழித்து மீதம் இருந்த பணத்தை மட்டும் கடைக்காரர் வாங்கிக் கொண்டார்.

இது பேப்பர் கடையில் கிடைக்காத விலை. மளிகைக் கடை ஐம்பது வருடங்களுக்கும் மேலாக தரத்திற்குப் பெயர் எடுத்த கடை. இதைவிட ஆச்சரியம் என்னவென்றால், நான் அடுத்த முறை மளிகைக் கடைக்குச் சென்ற போது, கடைக்காரர், சென்ற முறை கொடுத்த பேப்பருக்கு அடுத்தவருக்கு பில் போட்ட நினைப்பில் குறைவாகக் கொடுத்துவிட்டேன். அதனால் இந்தாருங்கள் என்று மேலும் ரூ.30-ஐக் கொடுத்தார். அன்னையின் முறையின் சிறப்பை உணர்ந்த விஷயங்களில் இதுவும் ஒன்று.

**மேற்சொன்ன அதே அன்பர் ஒழுங்கைத் தமது தொழிலகத்தில் கடைப்பிடித்த அனுபவம்:**

மரம் அறுக்கும் தொழிலகத்தில், மரங்களை அறுக்கும் பொழுது பெரிதும் சிறிதுமாகத் துண்டுகள் விழுவது வழக்கம். அன்னையின் சுத்தம், ஒழுங்கு என்ற முறைகளைச்

சிரத்தையாகப் பிரதிபலிக்க வேண்டும் என்பதைத் தீவிரமாக எடுத்துக் கொண்ட தருணம் அது. அப்படி எஞ்சிய மரத்துண்டுகளை assorted ஆக இருக்கிறது, என்ன செய்வது, என்று தொழிலகத்தை நிர்வகிக்கும் மகன் கேட்டதற்கு, அவற்றை தேக்கு, பூவரசு என்று make it sorted எனக் கூறி வெளி வேலைக்காகச் சென்றுவிட்டேன்.

அவ்வாறு அவர்கள் செய்ததில், நினைத்ததைவிட அதிகமான மரத்துண்டுகள் மரத்தூள் கலந்த மண்ணில் புதையுண்டு இருந்ததை எடுத்து சுத்தம் செய்து size மற்றும் மரம் எனப் பிரித்து அடுக்கி வைத்தனர்.

வெளியில் சென்று திரும்பிய என்னிடம் என் மகன் வந்து கூறியது எனக்கு ஆச்சரியம் அளித்தது. அவர், நீங்கள் சொன்னபடி அடுக்கி வைத்தவுடன், மூன்று பேர்கள் வந்தனர். என்ன வேண்டும் என்று கேட்டதற்கு நாங்கள் அடுக்கி வைத்த மரத்துண்டுகளைப் பார்த்து, இப்படிப்பட்ட மரத்துண்டுகளைத்-தான் நாங்கள் தேடி வந்தோம் எனக் கூறி விலைப்பேசிச் சென்றுள்ளனர் என்றார். விலையும் நாங்கள் எதிர்பாராத விலை.

Scrap-ஆக இருந்தாலும் அன்னையின் முறையில் ஒழுங்காக அடுக்கி வைத்தவுடன் அப்பொருள் தானே அதனை வாங்குபவர்களை அழைத்துக் கொண்டு வந்து நல்ல விலை தந்ததை அனுபவபூர்வமாக உணர்கிறேன்.

★★★

மற்றும் ஒரு நண்பர், இளம் வயதில் தந்தையின் தொழிலை ஏற்றவர். கடந்த வருடம் தந்தையின் திடீர் மறைவிற்குப்பின், லாரி டிரான்ஸ்போர்ட் தொழிலை முழுவதும் நிர்வகிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அவரது அனுபவம் அவரது மொழியில்:

கடந்த 5 வருடங்களாகவே எனது தந்தை கூடவே இருந்து பழக்கி இருப்பினும் நட்போடும் பாசத்தோடும் எனது அருகிலேயே இருந்த அவரது தீடீர் மறைவு என்னை நிலைகுலையச் செய்தது. அச்சமும் கவலையும் சேர்ந்தன.



தியான மையத்தில் ‘ஜீவனுள்ள எண்ணம்’ (Real Idea), ‘தொழிலின் ஜீவன்’ குறித்த விவரங்களையும், அவற்றை நடைமுறைப்படுத்தத் தேவையான வழிமுறைகளையும் கேட்டுக் கொண்டேன். ‘தொழிலின் ஜீவன்’ புத்தகம் வாங்கிப் படித்து, அதில் உள்ள சிலவற்றைப் பின்பற்றத் தொடங்கினேன்.

சுத்தம், தினமும் கணக்கு எழுதுவது என இரண்டையும் எடுத்துக் கொண்டேன்.

அனுபவத்தில், புத்தகத்தில் குறிப்பிட்டவை சாதாரண முறைகள் அல்ல; சத்தியமானவை என்பதை உணர்ந்தேன். செய்ய வேண்டியது நம் பங்கு என்பதும் தெளிவானது.

சுத்தத்தைவிட, தினமும் கணக்கு எழுதுவதைத் தவறாமல் செய்து வந்தேன். கண்கூடாகக் கண்டவை:

1. வசூலாகாத தொகை (no pending payments) என்பது இல்லை. பொதுவாக எங்கள் தொழிலில் கிரெடிட்டுக்கு லோடு வைத்து விட்டுப் பிறகுதான் கொடுப்பார்கள்.
2. ஒரு ரூபாய்கூட விடாது கணக்கு எழுதுவதால் நேர்மை உயர்ந்துள்ளது. டிரைவர் மற்றும் கொடுக்க வேண்டியவர்-களுக்குக் குறைக்காமல் கொடுத்து விடுவேன். இதனால் டிரைவர்களும் கணக்கு கொடுக்கும் போது ரூபாய் குறையாது சரியான தொகையைக் கொடுத்து விடுகின்றனர்.
3. பணத் தட்டுப்பாடு என்பது இல்லை. நண்பர்கள், தொழில் சம்பந்தப்பட்ட மற்றவர்கள், நான் கேளாமலேயே அவ்வப்போது பெரிய தொகையைக் கொடுத்து பத்து நாட்களுக்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் எனத் தருகிறார்கள். நன்றியுடன் பெற்றுச் சொன்னபடியே திருப்பிக் கொடுத்து வருகிறேன். என் தந்தை நடைமுறை செலவுகள் செய்ய, ஒரு நபரிடம் அவ்வப்போது பணம் பெறுவது வழக்கம். அவருக்குப் பிறகு, நான் அவ்வாறு செய்யாது இருந்ததால், அந்த நபர் வந்து, யாருடைய உதவியும் இல்லாது தொழில் நடத்தலாம் எனப் பார்க்கிறாயா எனச் சொல்லி, பார்க்கலாம் எனக் கூறுகிறார்.

4. டீஸல் திருட்டு என்பது இல்லை. மற்றவர்கள் கூறினாலும் எங்கள் டிரைவர்களை நான் சந்தேகப்படுவதில்லை.
5. சம்பள பாக்கி வைப்பது இல்லை. வேறு இடத்திற்கு வேலைக்குப் போகிறேன் எனச் சொன்னால், அன்றே கொடுக்க வேண்டிய தொகையைக் கொடுத்து விடுவேன். மற்ற இடங்களிலெல்லாம் பிறகு வந்து வாங்கிக்கொள் எனச் சொல்லி அனுப்பி விடுவார்கள். நீங்கள் இப்படி நடப்பது வித்தியாசமாக உள்ளது எனக் கூறக் கேட்கிறேன்.
6. நாம் கொடுக்க வேண்டியதை நான் கொடுக்கும் போது, கேட்டால்தான் வரும் என்ற **payments**, அவர்களே போன் செய்து வந்து வாங்கிக் கொள்ளுங்கள் என்கிறார்கள்.
7. நாங்கள் இறக்கும் லோடு எடை சரியாக இருக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். பூரண நேர்மையாக இருக்க வேண்டும் என்பதைக் கவனமாகக் கொண்டுள்ளேன். ரெகுலர் லோடு இருப்பதைக் காண்கிறேன். மற்ற டிரான்ஸ்போர்ட்காரர்கள், உங்களுக்கு மட்டும் எப்படி லோடு தொடர்ந்து கிடைக்கிறது என்கிறார்கள்.
8. பேங்க் லோனில் வாங்கிய லாரிக்கு மாதம் ரூ. 56,000/- கட்ட வேண்டும். ஒரு மாதம் தவணை செலுத்த பணம் சேரவில்லை. மனத்தில் அமைதியை வரவழைத்துக் கொண்டு இருந்து விட்டேன். எதிர்பாராது வெளி **agent** லோடு வேண்டி அணுகி, கையில் ரூ. 26,600 தொகைக் கொடுத்து ஆர்டர் கொடுத்தார். முன்பணம் தந்து லோடு எடுப்பது என்பது எங்கள் தொழிலில் அசாதாரணமான ஒன்று.

மேலும், 'தொழிலின் ஜீவன்' புத்தகத்தைப் படித்ததால் சில முறைகளையும் பின்பற்றி வருகிறேன்.

- பத்து நாட்களுக்கு ஒருமுறை கணக்கு பார்ப்பதை மாற்றி, டிரைவர்களை அன்றே கணக்கு கொடுக்கச் சொல்லி அன்றே முடித்து விடுகிறேன். இதனால் நேர்மை உயர்ந்துள்ளது. பத்து நாட்கள் என இருக்கும்போது, செலவுகள் மறந்து கொடுக்க வேண்டுமே என அட்ஜஸ்ட் செய்து கணக்கு கொடுப்பது மாறி, சரியான கணக்கு நடைமுறை வந்துள்ளது.
- கவனம் செலுத்தினால் அது வளரும் எனப் படித்தேன். இதுவரை இல்லாத **order-register maintain** செய்து வருகிறேன். வண்டி லோடு எதுவுமில்லாமல் நிற்பதே-யில்லை. அப்படியே நின்றால் மற்ற **transport agents** லோடு தருகிறார்கள்.
- தினமும், தொழில் சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்கள், டிரைவர் என அனைவருக்கும் மானசீகமாக நன்றியைக் கூறி வருகிறேன்.
- தொழிலில் நாணயத்தைக் கொள்கையாகக் கொண்டு ஜல்லி, மணல் போன்றவை ஏற்றும் போது அளவு குறையாமல் கொண்டு சேர்க்கிறேன்.
- தொழிலில் ஆர்வமும் உற்சாகமும் முக்கியம் என்பதை உணர்ந்து அவ்வண்ணம் இருக்கிறேன்.

'தொழிலின் ஜீவன்' புத்தகத்தில் உள்ள முறைகள் தவறாது பலன் தரும் சிஸ்டம், நாம்தாம் செய்யத் தவறுகிறோம் என்பதைக் கடந்த வருடங்களில் அனுபவமாகக் கண்டு வருகிறேன்.

★★★

மேற்சொன்ன அன்பர் அவர் இயல்பாக 'தொழிலின் ஜீவன்' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள முறைகள் பலவற்றையும் கடைப்பிடித்து வருகிறார். உதாரணமாக, நாள் தவறாமல் கணக்கெழுதாமல் படுக்கப் போவதில்லை, கேட்டுப் பெறும் பழக்கத்தைக் கைவிடுதல், நம்மைச் சோர்வடையச் செய்யும் தேவையில்லாத உறவுகளை அகற்றுவது போன்ற முதல் நிலை முறைகளையும் கடைப்பிடித்து வருகிறார்.

'தொழிலின் ஜீவன்' புத்தகம் கூறும் **தம் பங்குக்குரியவற்றை பக்தன் முடித்த நேரம், அன்னையை அழைத்தால், உடனே உரிய நேரம் வரும்** என்பது அனுபவ உண்மை.

# பவித்ராவான இராமகிருஷ்ணர்

இல.சுந்தரி

1927-ஆம் ஆண்டு ஸ்ரீ அரவிந்தரின் குறிப்பில் காணப்பட்ட ஒரு செய்தி, ''பவித்ரா பூர்வ ஜென்மத்தில் இராமகிருஷ்ணராக இருந்தார்'' என்பது.

மேலும் இராமகிருஷ்ணரைப் பற்றிச் சொல்லும் போது ''அவர் பக்தி சாம்ராஜ்யத்தை முழுவதுமாகக் கொள்ளை-யடித்தவர்'' என்பது.

காளி உபாசகரான ஸ்ரீ இராமகிருஷ்ணரை ஆன்மீக உலகம் அவதார புருஷராக அறியும்.

அவரே தம்மைப்பற்றி, ''இராமனும், கிருஷ்ணனுமாக வந்தவன் யாரோ அவனே இங்கு இராமகிருஷ்ணனாக வந்துள்ளான்'' என்பதாக ஒரு செய்தியும் உள்ளது.

அவதார புருஷராகிய இராமகிருஷ்ணர், ஏன் சாதாரண மனிதனாக - பவித்ராவாக வரவேண்டும். ஆன்மீக மண்ணாகிய இந்தியாவில் பிறக்காது ஏன் பாரிஸில் பிறக்க வேண்டும் என்பது போன்ற வக்கிரபுத்திக்கேயுள்ள கேள்விகள் என்னுள் எழுந்தன.

அன்னையே என் குழப்பம் தீர்த்து தெளிவு பெற அருளுங்கள் என வேண்டிய பிறகு எழுந்த கருத்துகளை இங்கே எழுதுகிறேன்.

**அன்பர்:** என்ன நண்பா! நான் வந்ததைக் கூட கவனியாமல் அப்படி என்ன ஒரே சிந்தனை?

**நண்பர்:** வா வா. நல்ல நேரத்தில்தான் வந்திருக்கிறாய். எனக்கு ஒரு விஷயம் பற்றி ஒரே குழப்பமாக உள்ளது. முடிந்தால் தெளிவுபடுத்தேன்.

**அன்பர்:** அது சரி. தெளிவாகச் சொன்னாலே குழம்பி விடுவாய். குழப்பமான விஷயம் என்றால் கேட்கவா வேண்டும். எதுபற்றி என்று சொல்.

**நண்பர்:** ஸ்ரீ அரவிந்தரைப் பற்றி என்ன நினைக்கிறாய்?

**அன்பர்:** அவர் சத்தியத்தின் திருவுருவம் என்று நினைக்கிறேன்.



**நண்பர்** அப்படியென்றால் அவர் கூறியதும் சத்தியமாகத்தானே இருக்க வேண்டும்.

**அன்பர்:** ஆமாம். அதிலென்ன சந்தேகம்?

**நண்பர்:** ஸ்ரீ இராமகிருஷ்ணரைப் பற்றி அவர் என்ன கூறியுள்ளார்?

**அன்பர்:** அவர் பக்தி சாம்ராஜ்யத்தை முழுமையாய்க் கொள்ளையடித்தவர் என்று கூறியுள்ளார்.

**நண்பர்:** அதிலொன்றும் எனக்குக் குழப்பமில்லை.

**அன்பர்:** வேறு என்ன குழப்பம்?

**நண்பர்:** பகவானுடைய 1927-ஆம் ஆண்டு குறிப்பில் ஆஸ்ரம சாதகர் பவித்ராவைப் பற்றி என்ன கூறியிருக்கிறார்.

**அன்பர்:** ஆம். பவித்ரா பூர்வ ஜென்மத்தில் இராமகிருஷ்ணராய் இருந்தவர் என்று கூறியிருக்கிறார்.

**நண்பர்:** அதில்தான் எனக்குக் குழப்பமாயுள்ளது.

**அன்பர்:** இதுதானா உன் குழப்பம்? சரி, சரி, நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டே வா. புரிகிறதா என்று பார்ப்போம்.

**நண்பர்:** கேள்வியை நீ கேட்கப் போகிறாயா? எனக்குக் கேட்டுத்தான் பழக்கம்.

**அன்பர்:** முதலில் நான் கேட்கிறேன். பிறகு நீ கேள்.

**நண்பர்:** சரி. உன் பெயர் என்ன? உன் பெற்றோர் யார்? என்பது போல் எளிமையாய்க் கேள்.

**அன்பர்:** அதைக் கேட்டால் நீ பெருங்குழப்பவாதியாகி விடுவாய்.

**நண்பர்:** சரி சரி. எப்படி வேண்டுமானாலும் கேள். தெரிந்ததைச் சொல்கிறேன்.

**அன்பர்:** இராமகிருஷ்ணர் மீது உனக்கு ஈடுபாடு எழுந்தது எதனால்?

**நண்பர்:** அவர் இடையறாத இறை சிந்தனை (காளி உபாசனை) உடையவராக இருந்ததால்.

**அன்பர்:** எனவே, அவர் பக்தர், தீவிர பக்தர் என்பது விளங்கியதா?

**நண்பர்:** ஆம். அப்படி உணர்வதாலேயே அவரிடம் பெருமதிப்பும், ஈடுபாடும், மரியாதையும் எழுகிறது.

**அன்பர்:** இராமகிருஷ்ணராக அவர் அடைந்த நிலை அல்லது தகுதி என எதை அறிகிறாய்?

**நண்பர்:** அவர் மோட்சத் தகுதி பெற்றிருப்பதாய் அறிகிறேன்.

**அன்பர்:** சரி. மோட்சம் என்பது என்ன?

**நண்பர்:** இறைவனுடன் இரண்டறக் கலப்பது.

**அன்பர்:** பூரணயோகக் குறிக்கோள் யாது?

**நண்பர்:** மோட்சம் அன்று. திருவுருமாற்றம். புவியில் வாழ்வு ஆன்மாவால் வாழ்ந்து வளர்வது. அடுத்தது ஆன்மா வாழ்வில் வளர்ந்து அதுவே புவி வாழ்வாவது.

**அன்பர்:** எனவே, மகாகாளியின் செல்லக் குழந்தையான இராமகிருஷ்ணர் மகாகாளியின் விருப்பமே தம் விருப்பம் என ஏற்பாரல்லவா? அதன்படி, மகாகாளி மானுடத்தில் வருகை தரச் சம்மதித்து பூமியில் அன்னையாக (காளி சிலையில் காட்சி தந்தவர்) மானுடத்தில் வருகை தரும் போது இராமகிருஷ்ணரும் உடன்வாராதிருப்பாரா?

**நண்பர்:** வாராதிருக்கமாட்டார். நிச்சயம் வருவார்.

**அன்பர்:** அவர்தான் பவித்ரா என்பதைக் கூறியவர் யாரோ அல்லர். சர்வமும் அறிந்த ஸ்ரீ அரவிந்தர். இதில் ஐயப்பட என்ன இருக்கிறது?

**நண்பர்:** அவர் ஏன் ஆன்மீக மண்ணில் (இந்தியாவில்) பிறக்காமல் பிரான்ஸில் பிறக்க வேண்டும்?

**அன்பர்:** அன்னை அவதரித்த பூமியிலேயே அவர் ஏன் பிறக்கக் கூடாது.

**நண்பர்:** ஆம். அது பொருத்தமே. அம்மாவைப் பின் தொடரும் பிள்ளையே அவர்.

**அன்பர்:** சரி. முற்பிறப்பில் அதாவது இராமகிருஷ்ணராக அவர் வந்தபோது அவர் காளியை உபாசித்து அனுபவித்தார்.



அவ்வளவே. காளி தேவியான ஸ்ரீ அன்னையின் பூரணயோகச் சட்டம் யாது?

ஜீவன் மூன்றுவித முன்னேற்றம் பெறுவது. அதாவது முதலாவது, ஜீவன் தனித்தன்மை பெறுவது. இரண்டாவது இந்தத் தனித்தன்மையை இறைவனுக்கு அர்ப்பணிப்பது. மூன்றாவது தன்னை ஐக்கியமடைந்த அந்தத் தனி ஜீவனை இறைவன் தன்னுடைமை-யாக்கிக் கொண்டு தன் வடிவாய் அவனை மாற்றுவது. இதில் இராமகிருஷ்ணர் பக்தியே தாமாய் தன் ஜீவனைத் தனித்தன்மை பெறச் செய்துவிட்டார். அவர் வரலாறு அறியாதவர் பக்தியுலகில் யாருளர்? யாவரும் அறிவர். இரண்டாவதாகிய பூரண சரணா-கதியையும் மேற்கொண்டவர். அவர்தம் இளம் மனைவியை நடுநிசியில் காளியாய் எழுந்தருளச் செய்து ஷோடசி பூஜை செய்தவர். இவரைச் சூழ்ச்சியாளர் சிலர் பரத்தையின் வீட்டிற்குச் செலுத்தியபோது, தாயே என விளித்து பரத்தையையே காளியாகக் கண்டவர்.

இறைவனுக்குத் தன்னைக் கொடுத்துவிட்டால் எல்லாம் முடிந்து விட்டதாக மற்ற யோகங்கள் (மோட்சத்தில்) நின்றுவிடுகின்றன. அன்னையின் பூரணயோகமோ அங்குதான் தொடங்குகிறது. மகாகாளியாகிய அன்னை இதுவரை இவரைத் தம் இரண்டாவது கட்டத்திற்குத் தயாராக்கினார். தன்னைப் பூரணமாய்ச் சரணடைந்த அந்தத் தனி ஜீவனை தெய்வீக ஜீவனாய் மாற்றி ஒரு தெய்வீக உலகில் செயல்படச் செய்வதற்கு, அதாவது அதிமானுடத்தின் முதல் பிரஜையாகச் செலுத்துவதற்கு ஸ்ரீ அன்னை இராமகிருஷ்ணரை பவித்ராவாக ஏற்றார் என்பதில் குறை என்ன? அதனாலன்றோ இரண்டறக் கலக்க விரும்பிய பவித்ராவைத் தடுத்தார். இது குறித்தே அக்டோபர் 2014 மலர்ந்த ஜீவியத்தில் ஸ்ரீ கர்மயோகி அவர்கள் ''இரண்டறக் கலந்தால் அது மோட்ச

நிலையை நாடும் என்பதால் அதை அன்னை தடுத்தார் போலும்'' என்று குறிப்பிடுகிறார்.

**நண்பர்:** இங்கு மேலும் ஒரு கருத்து பற்றித் தெளிவடைய விரும்புகிறேன். அதாவது இராமனாகவும், கிருஷ்ண-னாகவும் வந்தவன் யாரோ அவனே இங்கு இராமகிருஷ்ணராக வந்தவன் என்று அவர் தம்மை பற்றிக் கூறினாரே. இராமனையும், கிருஷ்ணனையும் ஆன்மீக உலகம் தெய்வமாக அல்லவோ அறியும்? அப்படியிருக்க அவர்கள் ஏன் திருவுருமாற வேண்டும்.

**அன்பர்:** ஏனெனில் பிரம்மமே சிருஷ்டியுள்ளும், சிருஷ்டியைக் கடந்தும் உள்ள ஏகவஸ்து. எதுவும் இல்லாதது. எல்லாம் வல்லது. இராமன் முனிவர் உலகத்தைச் சேர்ந்தவர். கிருஷ்ணன் ஆனந்தமான தெய்வீக தளத்தை, அதாவது இருவருமே மனதளத்தைச் சார்ந்த தெய்வங்கள். அஞ்ஞானக் கலப்புள்ளவர்கள். எனவே இவர்கள் திருவுருமாற பூரணயோகக் கருவியாக மாற உடல் பெற்ற மனிதனாக வேண்டும். எனவேதான் பவித்ரா சாமான்ய மனிதனாக திருவுருமாற்றத்திற்-குரிய உடலுடையவராய் மூன்றாவது வெற்றி அதாவது இறைவனைச் சரணடைந்தபின் இறைவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டு தெய்வீக உலகிற்கு ஏற்றவராய் மாற்றப்படக் கூடிய (அதி மானுடத்தில் தோன்றக் கூடியவராய்) தகுதி பெற்றவராய் வந்தார்.

**நண்பர்:** தகுதியா? அது எவ்வாறு?

**அன்பர்:** பெண்ணைப் போகப் பொருளாக நுகரும் பூவுலகச் சூழலில் எதனாலும் தீண்டப்படாது பெண்களை அன்னையாகவே கண்ட புனிதர் இவர். ஆன்மீகத் தூய்மையுடையவர்களுக்குக் கூறப்பட்ட தூய்மை யாவும் பொருந்தியவர். அதாவது சொந்த நோக்கங்களுக்காக அல்லாமல், பேர், புகழ், உலகப் பெருமைகள் மீது ஆசையில்லாமல், தனது சொந்த மன நோக்கங்கள், பிராண ஆசைகள், உடல்



விருப்பங்களை வற்புறுத்தாமல் தற்பெருமை, பதவி, அந்தஸ்த்திற்கு உரிமை கொண்டாடுதல் இவை-யில்லாமல், இறைவனுக்காக மட்டுமே வாழ்ந்தவர் இராமகிருஷ்ணர். அகங்கார உணர்வு கொண்ட எந்தச் செயலும் அஞ்ஞான உலகிலுள்ள மக்களுக்கு எவ்வளவு நல்லதாக இருப்பினும் அவை சாதகனுக்குப் பயனற்றவையே என்ற ஸ்ரீ அன்னையின் வாக்குப்படி வாழ்ந்தவர்.

**நண்பர்:** அதெல்லாம் சரியே. அவர்தான் பவித்ராவா? முன்பே ஸ்ரீ அரவிந்தர் கூறினார் என்பதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும் என்று கூறிய பின்னும், என் வக்கிரபுத்தி, சிறிய என் பகுத்தறிவு அடங்காமல் அடம்பிடிப்பதை பொருட்படுத்தாது, என் அகந்தை கரையுமாறு தயவு செய்து இக்குழப்பத்தையும் தீர்க்க வேண்டுகிறேன்.

**அன்பர்:** அன்னை புலன்களுக்கோ, மனத்திற்கோ உரியவரல்லர். மனங்கடந்த ஆன்மாவில் - சைத்திய புருஷனில் உறைபவர். ஆன்மாவாலேயே அவரைக் காணவும், உணரவும் முடியும். மனத்தில் எழும் எண்ணம் அன்னைக்குப் புறம்பாகவும் இருக்கும். புறவெளியில் திரியும் புலன்களால் அன்னையை நெருங்கவும் முடியாது. அந்நிலையில் பவித்ராவோ அன்னையிடம் நெருக்கமாக இருந்தவர். பார்த்தனுக்குச் சாரதியான பார்த்தசாரதிக்கு (ஸ்ரீ அன்னைக்கு) பவித்ரா சாரதியாக (கார் டிரைவராக) இருந்தவர். இரண்டறக் கலத்தலே அவர் ஆர்வமாக இருந்தபோது கூடாது, இது கூடாது. உன்னை அதிமானஸ உலகின் முதல் பிரஜையாக வெளிப்படுத்தத் திட்டமிட்டுள்ளேன் என்ற அன்னை அவர் தம்மோடு இரண்டறக் கலப்பதைத் தடுத்தார் என்று விளங்கவில்லையா? அவர் இராமகிருஷ்ணராக இருந்தபோது அவர் அன்னைக்குத் தம்மைப் பூரண சரணாகதி செய்து கொண்டாரல்லவா. பூரண யோகச் சட்டப்படி அது இரண்டாவது கட்டமே. மோட்சத்

தகுதி பெற்றபின் எழும் மூன்றாவது கட்டத்திற்கு திருவுருமாற்றத்திற்கு பவித்ராவை அன்னை ஏற்றது இரண்டறக் கலத்தலைத் தடுத்தமையால் புலனாக-வில்லையா?

**நண்பர்:** இப்போது தெளிவானது. தயவு செய்து என் அதிகப்பிரசங்கித்தனத்தை மன்னித்து மீண்டும் ஓர் ஐயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். 'பார்த்தசாரதி-யான அன்னைக்கு' என்று குறிப்பிட்டதில் பார்த்த-சாரதியான கிருஷ்ணரோ ஆடவர். ஸ்ரீ அன்னையோ பெண். அவரை எப்படி பார்த்தசாரதி எனக் கருத முடியும்?

**அன்பர்:** இதுபோலவே (முட்டாள்தனமான) ஒரு கேள்விக்கு அன்னையே பதிலளித்த நிகழ்ச்சியை இங்குக் குறிப்பிட விரும்புகிறேன். ஒருமுறை ஒரு ஆஸ்ரம சாதகி குழலூதும் கண்ணனின் விக்ரஹத்தை ஸ்ரீ அன்னையிடம் சமர்ப்பித்து, அக்கண்ணனைத் தாம் அடிக்கடி தம் கனவில் காண்பதாகக் கூறியுள்ளார். அன்னை புன்னகையுடன் அவ்விக்ரஹத்தைப் பெற்றுக் கொண்டு அச்சாதகி சென்றபின் தம் அருகில் இருந்த சாதகரிடம் ''அவள் என்னையே கனவில் தரிசிக்கிறாள்'' என்று கூறினார். அதற்கு அந்தச் சாதகரும் ''அது எப்படிச் சாத்தியம்? கிருஷ்ணரோ ஆண். நீரோ பெண். உம் கையில் புல்லாங்குழலும் இல்லையே'' என்றாராம். அதற்கு அன்னை மெல்ல நகைத்து, 'அதுவொரு விஷயமில்லை' என்றாராம். இன்னும் புரியவில்லையா? நீ சரியான மரமண்டை-தான். பரம்பொருள் ஆணா? பெண்ணா? ஒரு சிவனடியார் இறைவனை, ஆண் இலி, பெண்ணும் இலி, (ஆணும் இல்லை, பெண்ணும் இல்லை) என்று பாடவில்லையா? ''ஒரு நாமம், ஓருருவம் ஒன்றுமில்லாற் காயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ'' என்று மணிவாசகர் பாடவில்லையா? நாமமும், ரூபமும் நம் பொருட்டே.



1926-ஆம் ஆண்டு ஸ்ரீ அரவிந்தரின் யோகத்தில், கிருஷ்ணன் என்ற ஆனந்தம் அவர் பௌதிக உடலில் இறங்கியது. ஸ்ரீ அரவிந்தரோ ஸ்ரீ அன்னையுள் மறைந்தார். இணையில்லா தெய்வீக அன்பும், அனந்தமான ஆனந்தமுமே ஸ்ரீ அன்னை. அன்பு ஆணா பெண்ணா? ஆனந்தம் ஆணா பெண்ணா?

**நண்பர்:** போதும், போதும். நறுக் நறுக்கென்று எத்தனை குட்டுகள் என் தலையில்.

(இருந்தாலும் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை என்பதே உண்மை).

## ஜீவிய மணி

மனிதன் அனுபவத்தால் புரிந்து கொள்கிறான். அறிவால் புரிந்து கொள்வது அரிது. அனுபவம் வந்தாலும் புரியாமல் இருப்பது உண்டு. அனுபவத்தைப் புரிந்து கொள்ள முயல்பவர் குறைவு. நடப்பது அருளால் நடந்து விட்டால், நடந்தது ஆன்மாவுக்குத்தான் புரியும். ஆன்மாவுக்குப் புரிய வேண்டியது, அறிவுக்குப் புரியாது. புரிந்ததைச் செயல்படுத்த உணர்வு இடம் கொடுக்காது. உணர்வு இடம் கொடுக்கும் இடங்களிலும் சுயநலம், குணம் தடை செய்யும். நிர்ப்பந்தத்தால் மனிதன் மாறுவானே தவிர, நிர்ப்பந்தம் இல்லாமல் மாற முன்வரமாட்டான். மனிதன் ஆன்ம விழிப்பைத் தேடவில்லை, அதனால் ஆன்மா விழிக்காது. மனிதன் அறிவை நாடவில்லை, அதனால் மனம் விழிப்பாக இருக்காது. நாலுபேர் தன்னை ஏற்க வேண்டும் என்பதே மனித முயற்சி. அது உணர்வின் முயற்சி; அறிவின் முயற்சி இல்லை, ஆன்மாவின் முயற்சியும் இல்லை. அவன் தேடுவது அவனுக்குக் கிடைக்கிறது. மனிதன் தேடாதது கிடைக்க-வில்லை. இதில் ஆச்சரியமில்லை.

# அற்புதம் சமர்ப்பணம் செயலில் மலர்வது

ஸ்ரீ கர்மயோகி

பூரண சமர்ப்பணத்தை ஒரு நிமிஷமாவது கண்டவர், அதை *வாழ்வில் முழுமையாகப் பெற முடிவு செய்வது அவர் மனம் ஆத்மாவாகத் தயாராகும் நிலை*. முடிவை எடுப்பது முதல் நிலை, நிறைவேற்றுவது முடிவான நிலை. சாதகனாக விரும்பும் அன்பன் மனநிலை முதற்கட்டம். அன்பன் சாதகனாகும் வாய்ப்பை அன்னை அனுமதிப்பது இரண்டாம் கட்டம். சமர்ப்பணம் பூரண சமர்ப்பணமான நேரம் பெரிய நேரம், *வாழ்வு மனிதனை யோகம் செய்ய அழைக்கும் நேரம்*. இக்கட்டத்தை எட்டியவர், அதை இழக்காமல் பாதுகாக்க விரும்பும் மனநிலையில் மேலும் செய்யக்கூடியதை இங்கு கூறுகிறேன்.

ஏசுவின் வாழ்நாளில் மேரி என்பவர் இருந்ததாகச் சரித்திர நிகழ்ச்சியை ஆராய்ந்து பல செய்திகள் வெளிவந்துள்ளன. ‘‘புவியில் பரிணாமம் கனத்து சிக்கலான நேரங்களில் பகவானும், நானும் இருந்திருக்கிறோம்’’ என அன்னை கூறியுள்ளார். இந்த மேரி என்ற பெயர் ஏசுவின் தாயார், அவருடனிருந்த ஒரு பெண் இருவருக்கும் உண்டு. பகவானிடம் அன்னை இக்காலத்தைப் பற்றிக் கூறியதை **Agenda**-வில் குறிப்பிட்டுள்ளார். பகவான் அதற்குரிய ஆன்மீக விளக்கம் கொடுத்ததாக அன்னை கூறியுள்ளார். சூட்சும உலக வாழ்வின் அம்சம் அது. இன்று நமக்கு செல்போன் போன்ற பெரும் வசதிகள் வந்தபடியிருக்கின்றன. நாம் எழுதும் பேனா, பயன்படுத்தும் டம்ளர், சாப்பிடும் வாழைப்பழம் போன்ற எளிய பொருள்களை மனிதன் பெற அறிஞர்கள், சாஸ்திரிகள், விஞ்ஞானிகள் ஏராளமான பேர் ஏராளமான வழிகளில் செயல்படுகிறார்கள். *ஜடலோக வாழ்வு அது போல் சூட்சும லோகத்தால் ஆளப்படுகிறது*.

பூரண சமர்ப்பணம் கிட்டும் முதல் நிலைக்கும், கிட்டிய முடிவான நிலைக்கும் இடைவெளி தீவிர சாதகனுக்குச் சில நாட்கள், எளிய அன்பனுக்கு நீண்ட நெடிய ஜென்மங்கள். அன்னையை அறியாதவர் கேள்விப்பட முடியாத நிலையது. வாயிலில் நிற்பவர் வாய்ப்பை அறிந்து போற்றினால், வாய்ப்பு சூட்சுமத்தில் பலித்ததா இல்லையாயென அறியலாம். அதை ஜட வாழ்வில் **fuse**-ஆன பல்ப் சமர்ப்பணத்தால் பிரகாசமாக அதற்குரிய காலத்தையும் கடந்து எரிவதால் காணலாம். பரம எதிரி



அந்நியோந்நியமான நண்பராக மாறுவதை வாழ்வில் **(vital)** காணலாம். நம் அறிவுக்கு எட்டாத விஷயம் எளிமையாகப் புரிவது மனத்தில் அதைக் காண்பதாகும். பல்ப் **fuse** ஆனால் மாற்றுகிறோம். போட்டு நாளாயிற்று, அதற்குரிய காலம் முடிந்து விட்டது என்பது சட்டம். *மனம் இச்சட்டத்தை ஏற்றதை உயர்ந்த அறிவு ஆன்மாவில் சிறந்து அன்பனுக்கு அச்சட்டமில்லை எனக் கூற முடியும்*. சமர்ப்பணம் அதே மனநிலையில் பலிக்க தெம்பு, உறுதி, விடாமுயற்சி, தீவிரம், எதிர்பாராத மனநிலை, முழு முயற்சியால் பலிக்கும். பல்ப் வழக்கத்திற்கு மாறாக அதிகப்பிரகாசமாக எரியும், தொடர்ந்தும் எரியும். ஜடத்தில் செய்த சோதனையைவிட பிராணன், உயிரில் செய்யும் சோதனை கடினம். ஒருவர் பரம எதிரியானார். அவரை நான் மன்னித்து விட்டேன். மனம் மன்னிக்கவில்லை என்றால் அவருடன் உள்ள அனைத்து தொடர்புகளிலும் நம் சிறு குறையிருப்பது தெரியும். அவற்றை அகற்றினால் கோபம் எழும். கோபத்தை விலக்கினால் எரிச்சல், விரக்தி நிற்கும். *அவருள் இறைவனைக் கண்டால் ஆனந்தம் எழும் என்பது தத்துவம்*. அந்நிலையில் தொடர்ந்த இடைவிடாத தீவிர அழைப்பு அதையும் சாதிக்கும். பருவம் **season** முடிந்த பிறகு பழம் பழுக்காது. தவறி ஒன்று இரண்டு பழுக்கலாம். பருவம் பலன் தரும். பருவத்தைக் கடந்தபின் பலனில்லை என்பது மனம் கண்ட அறிவு. பருவம் பருவ காலத்திற்குரியது. *சமர்ப்பணம் காலத்தைக் கடந்தது என்ற எண்ணத்தை மனம் ஏற்காது*. புரிந்தால் ஏற்கலாம், புரியாது. எண்ணத்தை மனம் ஏற்பது ஒரு கட்டம். மரம் பழுப்பது முடிவான பெரிய அற்புதம் ஆச்சரியமாக மலர்வது. முதற்கட்டமே இங்கு கருதப்படுவது. அடுத்தது யோக சித்தி. நான் அதைக் குறிப்பிடவில்லை. *சமர்ப்பணம் மனத்தில் நிறைந்து அதனால் நெஞ்சம் நெகிழ்ந்து உடல் ஒரு நிமிஷம் புல்லரித்தால் மனம் அக்கருத்தை ஏற்கும்*. ஏற்று மகிழும். இறைவன் ஆனந்தத்திற்காக உலகைப் படைத்தார் எனில், அதன் முடிவில் ஆனந்தம் பெறுவார் எனப் புரியும். எந்த நேரமும், எந்தச் செயலிலும், எந்த அசைவிலும் இறைவன் அவர் தேடும் ஆனந்தத்தை அனுபவிக்கிறார் என அன்னை கூறுகிறார். நான் கூறிய இம்மனநிலையில் காணும் எவரும் அவர் கோணத்தில் ஆனந்தம் பெறுகிறார் எனத் தெரியும். மண்ணில், சகதியில் விளையாடும் குழந்தையின் ஆனந்தம் நமக்கு உணர்வாகப் புரியும். ஒரு நிமிஷமானாலும் இது பெரியது. இதைக் காப்பாற்றி, வளர்த்து, முழுப்பலன் பெறுவது யோகப் பயிற்சி.

அன்னை இலக்கியம்

## பார்வைகள்

(சென்ற இதழின் தொடர்ச்சி)

சமர்ப்பணன்

### 19. பூரணியின் பார்வை

களங்கமோ, குறையோ இல்லாத மனிதரை சந்தித்த சந்தோஷத்தோடு வீடு திரும்பினேன். அணையா விளக்கொன்று என் இதயத்தில் ஏற்றப்பட்டுவிட்டது போலிருந்தது.

‘என்னடி, முகமெல்லாம் சிரிப்பாக இருக்கிறது? யாரையாவது காதலிக்க ஆரம்பித்திருக்கிறாயா?’ என்று அம்மா கேட்டார்.

அம்மாவால் இப்படித்தான் பேச முடியும். சில வருடங்களுக்கு முன்னால் என்றால் சண்டை போட்டிருப்பேன். இப்போதெல்லாம் ஒருவர் எப்படி இருக்கிறாரோ, விமர்சனம் எதுவும் செய்யாமல் அவரை அப்படியே ஏற்றுக் கொண்டு முழுமையாக மதித்து நடக்கிறேன். அதனால் சந்தோஷம்தான் உண்டாகிறது.

‘ஏன் நான் காதலிக்கக் கூடாதா?’ என்று கேட்டேன்.

‘தாராளமாகச் செய். ஆனால் பணக்காரனாக, செல்வாக்குள்ளவனாக பார்த்து காதலி!’ என்றார் என் அம்மா.

‘நான் பிரம்மத்தைக் காதலிக்க ஆரம்பித்துவிட்டேன். பிரம்மத்தை விட பெரிய ஆள் யாராவது உனக்குத் தெரியுமா?’ என்று சிரித்துக் கொண்டே கேட்டேன்.

அம்மா குழப்பத்துடன் என்னைப் பார்த்தார்.

‘புத்தி கெட்டவள் போல பேசாதே. ஆனால் நீ சிரிப்பதைப் பார்த்தால் சந்தோஷமாக இருக்கிறது. காலையில் நீ வீட்டை விட்டுப் போன வேகத்தைப் பார்த்தபோது திரும்பி வராமல் எங்கேயாவது போய் விடுவாயோ என்று பயந்துவிட்டேன்’ என்றாள் அம்மா.



காலையில் மக்கள் தொகை கணக்கெடுக்கும் அதிகாரி வீட்டிற்கு வந்தார். பெயரெழுதிக் கொள்ளும் போது என் பெயரின் முன்னெழுத்தைக் கேட்டார். அம்மா ‘கே’ என்றார்.

‘அம்மா என் சான்றிதழில் ‘வி’ என்றிருக்கிறது’ என்றேன்.

‘சரி, ஏதோ ஒன்று. ‘வி’ என்றே போட்டுக் கொள்ளுங்கள்’ என்று அம்மா அதிகாரியிடம் கூறினார்.

என் மொத்த ஜீவனும் அவமானத்தால் சுருங்கியது. எதுவும் புரியாமல் அதிகாரி சென்ற பின் ‘அம்மா, நான் அநாதையாக இருந்திருக்கலாம்’ என்றேன்.

‘உனக்கென்னடி குறை? பழங்காலத்து இளவரசிகள்கூட உன்னைப் போல வளர்ந்திருக்க மாட்டார்கள்’ என்று கூறியபடி என் முகத்தைப் பார்த்தார் அம்மா. பயந்து விட்டார்.

நான் பதில் எதுவும் பேசாமல் வேகமாக வெளியேறி காரை எடுத்துக் கொண்டு கடற்கரைக்குச் சென்றேன். வெயிலில் காய்ந்து உடலைச் சுடும் மணலில் அமர்ந்து கடலையே வெகுநேரம் பார்த்துக் கொண்டிருந்தேன். அதில் மீண்டும் மீண்டும் பல உயரங்களில் எழும் அலைகளைப் போல என் மனதில் கேள்விகள் எழுந்து பதிலின்றி அடங்கி மீண்டும் எழுந்தன.

நான் யார்? ஏன் பிறந்தேன்? ஏன் வாழ்கிறேன்? என் எதிர்காலம் என்ன? எனக்கும் உலகிற்கும் என்ன உறவு? உலகம் என்பது என்ன? யார் அதை உருவாக்கியது? எதற்காக? அதில் என் பங்கு என்ன? எத்தனையோ காலமாக விரிந்து கிடக்கும் கடலையும், வானத்தையும் பார்த்ததும் என் அகம் விரிந்தது. கூடவே காலம் என்றால் என்ன? வெளி என்றால் என்ன? என்ற கேள்விகளும் எழுந்தன.

எனக்குத் தோழிகளோ, தோழர்களோ எவருமில்லை. என் அம்மாவோடு நகரத்தில் இருக்கும் எல்லா பெரிய மனிதர்களின் வீட்டு விசேஷங்களுக்கும் போவதுண்டு. இப்போது நிறுத்திவிட்டேன். எல்லோரும் மரியாதையோடு பழகுவார்கள். ஆனால் எவருமே நெருங்கிப் பழக முன் வரமாட்டார்கள்.

அப்படியே நெருங்கிப் பழகியிருந்தாலும் எத்தனை பேர் என் நட்பை தொடர விரும்பியிருப்பார்கள்?

புதிய ஆடைகள், நகைகள், வீடு, கல்யாணம், குழந்தை, வேலை, சினிமா, ஊர் வம்பு - திரும்பத் திரும்ப இவைதான் எவர் பேச்சிலும் இருக்கும். ஆழமான சிந்தனை எதுவுமில்லாமல் மேம்போக்காக இவற்றைப் பற்றிப் பேசிவிட்டு அப்போதே மறந்தும் விடுகிறார்கள். ஆனால் சந்தோஷமாக இருப்பது போல நடந்து கொள்கிறார்கள். எனக்கோ ஊர்வம்பைக் கேட்டால், புரளி பேச ஏன் மனிதன் விரும்புகிறான்? சமூக வளர்ச்சியில் அதற்கு பங்கு உண்டா? என்று யோசிக்கத் தோன்றுகிறது. இதனால்தானோ என்னவோ, சில காலமாக நான் முழுக்க முழுக்க அகவயப்பட்டுவிட்டேன்.

பாவம், அம்மா மீது ஏன் கோபப்படுகிறேன்? தனக்கு அமைந்த வாழ்வை எதிர்ப்பெதுவுமின்றி ஏற்றுக் கொண்டு, அதன் போக்கில் செல்கிறார். தானும், நானும் நன்றாக இருக்க வேண்டுமென பிரியப்படுகிறார். அதற்காக எதை வேண்டுமானாலும் செய்வார். ஆனால் எவருக்கும் கெடுதல் செய்யமாட்டார். எவரையும் புண்படுத்த மாட்டார். அவர் தன்னளவில் முழுமையானது என்று தான் நினைக்கும் வாழ்க்கையை சந்தோஷமாக வாழ்கிறார்.

எவரையும் அவருள்ள நிலையில் ஏற்க வேண்டும் என்று விரும்பினாலும் அக ஆழத்தில் உள்ளவை சீண்டப்படும்போது நான் சினவயப்பட்டு விடுகிறேன். மன்னித்துக் கொள்ளுங்கள் அம்மா.

மனம் நெகிழ்ந்து கனமிழந்து காற்றில் மிதக்கும் வெற்றுக் காகிதமாகியது.

மழைத்துளிகள் சடசடவென்று என் மீது விழுந்தபோதுதான் வெகு நேரமாக என்னை மறந்து கடற்கரையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன் என்பதை உணர்ந்தேன். மதியமாகி விட்டிருந்தது.

வீடு திரும்பும் வழியில்தான் துரியபுத்திரனை சந்தித்தேன்.



‘நீங்கள் சொல்வதும் நன்றாகத்தான் இருக்கிறது. வேறு சூழ்நிலையில் சிறிது காலம் இருந்தால் எனக்கு நல்லது என்று தோன்றுகிறது’ என்றேன் அம்மாவிடம்.

‘யாரடி உன் மனதைக் கலைத்தவன்?’ என்று அம்மா கேட்டார்.

அம்மாவிடம் நான் எதையும் மறைத்ததே இல்லை. நான்தானே என் அம்மா?

‘துரியன் எதையும் கலைக்கவில்லை, சிதறிக் கிடந்த என் பகுதிகளை ஒன்று சேர்க்கும் வழியைச் சொன்னார்’ என்றேன்.

துரியனை சந்தித்த விவரங்களைக் கூறினேன்.

‘என்ன தொழில் செய்கிறான்? எவ்வளவு சொத்து தேறும்?’ என்று ஆர்வத்துடன் கேட்டார் அம்மா.

‘அதெல்லாம் எனக்குத் தெரியாது. நல்ல மனிதர். அநேகமாக உன் பார்வையில் அன்றாடங்காய்ச்சியாகத்தான் இருப்பார். ஆன்மீகவாதி. பூரணயோக சாதகர்’ என்றேன்.

‘ஆன்மீகமும் நல்ல தொழில்தான். மடமோ, ஆசிரமமோ ஆரம்பித்துவிட்டால் கோடிகோடியாக குவித்துவிடலாம். எனக்குத் தெரிந்த பெரிய மனிதர்கள் எல்லோரையும் அங்கே அனுப்பி வைக்கிறேன்’ என்றார் அம்மா.

‘அவர் ஆன்மீக முயற்சியை ஆண்டவனுக்காக செய்கிறார்’ என்றேன்.

‘பிழைக்கும் சாமர்த்தியம் இல்லாதவனாக்கும்?’ என்று எள்ளல் தொனிக்கும் குரலில் கேட்டார் அம்மா.

‘அம்மா, சமூகத்தோடு ஒத்து வாழ்பவர்கள்தான் பெரும்பாலானவர்கள். சமகாலத்துச் சூழலில் இருந்து கொண்டு, அதில் பிழைத்திருக்கத் தேவையான திறமைகளை மட்டும் வளர்த்துக் கொண்டு, பணமும் புகழும் சம்பாதிப்பதை வெற்றியாகவும், அதைச் செய்யாதவர்களை தோற்றவர்களாகவும் நினைக்கிறார்கள். தோற்றவர்கள் தங்கள் சுயத்தை, தனித்துவத்தைப் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் வென்றவர்களைப் போல வாழ்வது வெற்றி என்று நினைக்கிறார்கள். அது அவர்களது

சொந்த விருப்பம். சமூகத்தோடு ஒத்துப் போகாதவர்களில் ஒரு சிலர் சுய அழிவையும், சமூக அழிவையும் தரும் காரியங்களைச் செய்கிறார்கள். அவர்களது பலத்தைப் பொறுத்து, அவர்கள் மீது மற்றவர்கள் கொள்ளும் பயத்தைப் பொறுத்து வெற்றியும் பெறுகிறார்கள்' என்றேன்.

'உன் துரியன் எந்த ரகம்?' என்று கேட்டார் அம்மா.

'சமூகத்தோடு ஒத்துப் போகாதவர்களில் இன்னொரு பிரிவு இருக்கிறது. இவர்கள் சமூக முன்னேற்றத்தைப் பற்றி, மனித குலத்தின் எதிர்காலத்தைப் பற்றி சிந்திப்பவர்கள். அதற்காக மட்டுமே உழைப்பவர்கள். பணமோ, புகழோ இவர்களுக்கு முக்கியமில்லை. ஆர்வமும், லட்சியமுமே முக்கியம். தாங்கள் என்ன செய்ய வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்பதை தாங்களே முடிவு செய்வார்கள். பெரும்பான்மையோரின் பார்வையில் இவர்கள் உதவாக்கரைகள், வீணர்கள், திறமையற்றவர்கள். ஆனால், சமூக வளர்ச்சியை, முன்னேற்றத்தை உருவாக்குபவர்கள் இவர்கள்தாம். கலைக்கும், தத்துவத்திற்கும், அறிவியலுக்கும், ஆன்மீகத்திற்கும் தங்களை முழுமையாக சுயார்ப்பணம் செய்து கொண்ட இவர்கள் இடும் பிச்சையால்தான், பெரும்பான்மை பிழைத்திருக்கிறது. பெற்ற பிச்சை அகங்காரத்தைச் சீண்டுவதால், லட்ச ரூபாய் சம்பாதிப்பதை எளிய மூடன் பெரிய தகுதியாக நினைத்துக் கொண்டு லட்சியவாதிக்கு எப்படி வாழ வேண்டும் என்று அறிவுரை சொல்ல ஆரம்பித்து விடுகிறான். துரியன் ஆன்மீக லட்சியவாதி' என்றேன்.

'லட்சியவாதிக்கும் பசி உண்டு, குடும்பமும், அதை நடத்த வருமானமும் அவனுக்குத் தேவை' என்று சிறிது உரத்த குரலில் அம்மா சொன்னார்.

'அப்படி நினைத்திருந்தால் ஸ்ரீ அரபிந்தோ பரோடா மகாராஜா தந்த வேலையை விட்டுவிட்டு இந்தியாவிற்காக சிறைக்குப் போயிருக்க மாட்டார். மனைவி மிருணாளினியை விட்டுவிட்டு பாண்டிச்சேரிக்குச் சென்று உலக நன்மைக்காக பட்டினி கிடந்து யோகம் செய்திருக்க மாட்டார்' என்றேன்.



சிறிது நேரம் மௌனமாக இருந்தார் அம்மா. பின் சாந்தமான குரலில் 'நீ சந்தோஷமாக இருப்பதுதான் என் லட்சியம். உனக்குப் பிரியமானதைச் செய். நீ எப்போது சொல்கிறாயோ அப்போது துரியனைப் பற்றி விசாரித்துவிட்டு, திருப்தியாக இருந்தால், உனக்கும், அவனுக்கும் கல்யாணம் செய்து வைக்கிறேன்' என்றார் அம்மா.

'அம்மா. நான் காதல் மயக்கத்திலோ, கல்யாண நினைப்பிலோ இல்லை. என்னுடைய ஆர்வம் ஆன்மீகத்திலும், யோகத்திலும்தான் இருக்கிறது. துரியன் அதற்கு வழிகாட்டி உதவுவார் என்று தோன்றுகிறது, எனக்கு வழிகாட்ட துரியனிடம் எதுவுமில்லை என்றால் அவராகவே என் வாழ்விலிருந்து விலகி விடுவார். வேறு வழிகாட்டி வருவார். அவரைப் பற்றிய வேறு எந்த எண்ணமும், சலனமும் என்னிடம் இல்லை. அவரிடமும் இருக்காது' என்றேன்.

'ஆண்களின் சஞ்சல புத்தியைப் பற்றி உனக்கு ஒன்றும் தெரியவில்லை' என்று முணுமுணுத்துக் கொண்டே அம்மா நகர்ந்து விட்டார். சிறிது நேரத்தில் வெளியே கிளம்பிச் சென்று விட்டார்.

அம்மா கேட்ட கேள்வியிலிருந்த நடைமுறை யதார்த்தத்தைப் பற்றி யோசித்தேன். அம்மா முன்பு சம்பாதித்துச் சேர்த்த பணத்தில் நான் வசதியாக வாழ்ந்து கொண்டு, அவரது வழி சரியில்லை என்று வாதம் செய்து கொண்டிருக்கிறேன். என் மனம் ஏற்கும் வழியில் என்னால் சம்பாதிக்க முடியுமா? எவ்வளவு சம்பாதிக்க முடியும்? அதைக் கொண்டு இத்தனை வசதியாக வாழ முடியுமா? இலக்கிய பட்டப்படிப்பிற்கு என்ன வேலை கிடைக்கும்? தனியார் பள்ளியிலோ, கல்லூரியிலோ ஆசிரியை வேலைக்குச் சேர்ந்தால் என் மனம் விரும்பும் வழியில் பாடம் சொல்லித் தர அனுமதிப்பார்களா?

பொன்னொளிபுரத்திற்குப் போய் சிறிது காலமாவது இருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இங்கிருக்கும் வசதிகள் அங்கே இருக்காதுதான். வசதிகள் இல்லாமல் என்னால் வாழ முடியாதா? லட்சியவாதி என்றால் உடனே வசதிகளைவிட

வேண்டும், யோக அழைப்பை ஏற்க வறுமையை விரும்ப வேண்டும் என்பன போன்ற அபத்தமான எண்ணங்கள் என்னிடம் இல்லை. ஆனால் வசதியையும், வசதியின்மையை-யும் சமமாகக் கருதும் மனப் பக்குவம் என்னிடம் இருக்கிறதா?

துரியன் பேசுவது பிடித்திருக்கிறது என்பதற்காக பொன்னொளிபுரம் போனால், ஆன்மீக முன்னேற்றம் தடைபடும்.

எதையும் விலக்காமல், எதிர்முனைகளையும் சமப்பிரியத்-துடன் ஏற்கவேண்டிய பூரண யோக ஆன்மீக அழைப்பை ஏற்கும் பக்குவம் எனக்கு உண்டா என்று நான் தெரிந்து கொள்ள வேண்டும். அம்மாவின் பணத்தில் வாழ்ந்து பழகிவிட்ட என்னால் சொந்தமாகச் சம்பாதித்து அதில் வாழத் தெரிய வேண்டும். அடுத்தவர்களுக்கு உத்தரவிட்டே வாழ்ந்து பழகிவிட்ட என்னால் பிறர் உத்தரவிட்டால் அதை அகந்தையின்றி நிறைவேற்ற முடியுமா?

அவசரப்படாமல் நிதானமாக எதையும் செய்யவேண்டும். எண்ணங்களை, உந்துதல்களை இறைவனிடம் சமர்ப்பணம் செய்துவிட்டு, தானே வருபவற்றை இறைவனுக்காக ஏற்க வேண்டும் என்று துரியன் சொன்னாரே? என்முன் இறைவன் ஒளிமயமாக நிற்பதாகக் கற்பனை செய்து கொண்டு என்னுள் எழுந்த கேள்விகளை அவனிடம் எனக்குப் புரிந்த வகையில் சமர்ப்பணம் செய்தேன். மனதில் எழுந்த எல்லாவற்றையும் மௌனமாகக் கூறிவிட்டு, நீ இனி செய்வதை விருப்பத்துடன் ஏற்பேன் என்ற வாக்கைக் கொடுத்தேன். அமைதி என்னை சூழ்ந்த உணர்வு உண்டாயிற்று.

அம்மாவை வருத்தப்படுத்தி விட்டேன். சமாதானப்படுத்த நினைத்தேன். அம்மா எப்போதும் பிரியமுள்ள அம்மாதானே? அது மாறாத உண்மை என்றபோது, பிரியத்தை ஏன் கோபமாக மாற்ற வேண்டும்?

பால்பாயசம் அம்மாவிற்குப் பிடிக்கும். விதவிதமாக சமைக்க எனக்குப் பிடிக்கும். அம்மாவிற்காகச் செய்யலாம் என்று



நினைத்தேன். அம்மாவிற்காக அல்ல, அவருக்குள் இருக்கும் இறைவனுக்காகச் செய்யலாம் என்று தோன்றியது.

உடை மாற்றிக் கொண்டு வடையும், பாயாசமும் செய்து கொண்டிருந்தபோது அழைப்பு மணி ஒலித்தது. அம்மா வந்துவிட்டாரா? கையில் கரண்டியோடு கதவைத் திறந்தேன்.

சற்று பருமனாக இருந்த வாலிபர் ஒருவர் என்னைப் பார்த்து கரம்குவித்து வணங்கினார். ‘அம்மாவைப் பார்க்க வந்தேன். நான் வீட்டு விசேஷங்களுக்குச் சமையல் செய்பவன். பெயர் பிசிபேளா பிரசாதப்பா. அம்மா சிபாரிசு செய்தால் நிறைய வேலை கிடைக்கும் என்று என் நண்பர் சொன்னார்’ என்றார்.

‘அம்மா வெளியே போயிருக்கிறார். எப்போது வருவார் என்று தெரியவில்லையே’ என்றேன்.

‘நான் ஒரு மணி நேரம் கழித்து திரும்ப வருகிறேன்’ என்று கூறி திரும்பியவர் என்னைப் பார்த்து தயக்கத்துடன் ’நீ இங்கே சமையல்காரியாக வேலை பார்க்கிறாயா? நல்ல திறமைசாலி-தான். பால்பாயசமும், வடையும் அபாரமான சுவையோடு இருக்கின்றன’ என்றார்.

திகைத்தேன். ‘வாசனையை வைத்து தோராயமாக பாயசம், வடை என்று கண்டுபிடித்தது சரிதான். சுவை எப்படி வாசனை மூலம் தெரியும்?’ என்று கேட்டேன்.

‘அருமையாக சமைக்கிறாய். சமையலில் சில ரகசியங்கள் இருக்கின்றன. தெரிந்து கொள். எதை வேண்டுமானாலும் எந்த புலனாலும் தெரிந்து கொள்ளலாம். புலன்கள் இல்லாமலும் தெரிந்து கொள்ளலாம். கண் பார்க்கும். காது கேட்கும் என்று விஞ்ஞானி சொல்கிறார். அது மனம் பழகிக் கொண்டுவிட்ட பொது உண்மை. மனதின் பழக்கத்தை மாற்றிவிட்டால் மூக்கால் சுவைக்கலாம். நாக்கால் முகரலாம். அசைவ சமையலின் சுவையை முகர்ந்து பார்த்தே கணிக்கும் சைவ சமையல்காரர்கள் பல பேர் உள்ளனர். அடுத்த ரகசியம், எதைச் சமைத்தாலும் பகவானுக்குச் செய்யும் பாவனையில் சமைக்க வேண்டும். இன்னொரு ரகசியம், பரிமாறும்போது பகவானுக்குப்

பரிமாறுவதாக பாவனை செய்து கொள்வது. உன் சமையல் பாராட்டப்படுவது முக்கியமல்ல. சாப்பிடுபவருக்கு உணவு சுவையாக இருப்பது முக்கியம் என்று எப்போதும் நினைத்துக் கொள்' என்றார் பிலிபேளா பிரசாதப்பா.

'அவசியம் பின்பற்றுகிறேன். மிகவும் நன்றி' என்றேன்.

'நன்றி சொன்னால் போதுமா? எனக்கொரு உதவி செய்தால் தேவலை' என்றார் பிரசாதப்பா.

'சொல்லுங்கள், செய்கிறேன்' என்றேன்.

'சூளைமேட்டில் கல்யாணமாகாத நான்கு வாலிபர்களுக்கு சமையல்காரி வேண்டுமாம். உன்னைப் போல அற்புதமாக சமைக்கும் தோழியோ, அக்காவோ, தங்கையோ இருந்தால் அங்கே போகச் சொல்' என்று கூறிக் கொண்டே ஒரு விலாச அட்டையை நீட்டினார் பிரசாதப்பா.

'நான் போகக் கூடாதா?' என்றேன்.

'இங்கே வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாய். அதை கெடுப்பேனா? பங்களாக்காரர்கள் கொடுக்கும் சம்பளத்தை அடுக்குமாடி வீட்டுக்காரர்கள் கொடுக்க முடியுமா?' என்றார் பிரசாதப்பா.

'உங்களுக்கு மிகவும் வேண்டியவர்களோ?' என்று கேட்டேன்.

'இல்லை. நான் சமையல்காரன். உணவு தேவை என்று ஒருவர் வேண்டியபின் என்னால் உதவி செய்யாமல் இருக்க முடியாது. நாம் கணக்கு வைத்துக் கொள்ளாவிட்டாலும் நம் எல்லா செயல்களுக்கும் வாழ்வு கணக்கு வைத்துக் கொள்ளுமே' என்றார் பிரசாதப்பா.

பிரசாதப்பா சென்றபின் சிரித்துக் கொண்டே சமையலை முடித்தேன். சமையல்காரி வேடம் எனக்குக் கச்சிதமாக பொருந்துகிறதோ? மறுநாளே துரியனை சந்தித்துவிட்டு சூளைமேடு சென்று வேலை கேட்க முடிவெடுத்தேன்.



மறுநாள் காலையில் துரியனின் அறைக்குச் சென்றபோது அவருடைய நண்பர்கள் பலர் அங்கிருந்தனர். எல்லோரும் பல லௌகீக விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டிருந்தனர். துரியன் மிகவும் குறைவாகத்தான் பேசினார். பின் அவரையும், அவர்களது நண்பர்கள் இருவரையும் என் காரில் பேருந்து நிலையத்தில் இறக்கிவிட்டேன். 'விரைவில் மீண்டும் சந்திப்போம்' என்று இருவரும் பரஸ்பரம் கூறி விடை பெற்றுக் கொண்டோம்.

காரை வீட்டில் நிறுத்திவிட்டு, பஸ் பிடித்து சூளைமேடு சென்றேன். சமையல் வேலையில் சேர்ந்து விட்டு, அம்மாவிடம் சொல்லிவிட்டுச் செல்ல வீடு திரும்பினேன்.

அம்மா அழ ஆரம்பித்தார். 'ஏனிப்படி கஷ்டப்பட ஆசைப்படுகிறாய்? சமைக்க பிரியம் என்றால், உனக்காக நட்சத்திர உணவு விடுதி கட்டித் தருகிறேன். பத்து பெரிய சமையல்காரர்களை வைத்து அதை நடத்து. அன்னக்காவடி பயல்களுக்கு என் பெண் சமைத்துப் போட வேண்டுமா? அதற்காகவா உன்னை சீராட்டி வளர்த்தேன்?' என்று புலம்பினார்.

'அம்மா, சிறுவயதில் நீங்கள் பட்ட கஷ்டங்கள் பற்றி எனக்குத் தெரியும். என்னை ஒரு கஷ்டமும் இல்லாமல் மிகவும் வசதியாக வளர்த்து விட்டீர்கள். அதனால்தான் உங்களையே குறை சொல்லும் துணிச்சல் வந்தது. இப்படி ஏதாவது வேலை பார்த்தால்தான் எனக்கு அனுபவமும், புத்தியும் வரும்' என்றேன்.

'அனுபவமும், புத்தியும் வர வேறு வழிகளா இல்லை? என்னை எப்படி வேண்டுமானாலும் திட்டிக்கொள், எவ்வளவு குறை வேண்டுமானாலும் சொல்லிக்கொள். என் மேலிருக்கும் வெறுப்பினால் நீ கஷ்டப்பட வேண்டாம்' என்றார் அம்மா.

அம்மாவை இறுக அணைத்துக் கொண்டேன். 'உங்கள் மீது எனக்கு ஒரு வெறுப்புமில்லை. பிரியம் மட்டும்தான் இருக்கிறது. உங்களைப் போன்ற பெரிய ஆத்மாவிற்கு மகளாகப்

பிறந்ததற்கு இன்று பெருமைதான் படுகிறேன். சில நாட்களில் திரும்பி வந்துவிடுவேன்' என்று கூறினேன்.

'நீ மனதில் வேறென்னவோ வைத்திருக்கிறாய். நீ என்னைப் போல அறிவற்றவள் இல்லை என்று எனக்குத் தெரியும். தினமும் ஒரு முறையாவது போனில் பேசு. சிறு பிரச்சனை என்றாலும் எனக்குப் போன் செய்துவிடு. நான் வந்து விடுகிறேன். சீக்கிரமாக வீடு திரும்பிவிடு' என்றார் அம்மா.

(தொடரும்)

## ஜீவிய மணி

அன்னையின் வாழ்வெனும் யோகம் முழுவதும் சத்தியம் - பொய்யின் கலப்பற்றது என்பதால் இழப்பிற்கு இடம் இருக்க முடியாது. அன்னை நஷ்டம் தருவது இல்லை. நஷ்டமும் தோல்வியும் எவருக்காவது வந்தால் அவர் வாழ்வில் அன்னை இல்லை என்பதே பொருள். நஷ்டம் ஏற்பட, நமக்குப் புரிந்த புறக் காரணங்களும், புரியாத அகக் காரணங்களும் உள்ளன. நமது மனதில் இயலாமை, ஈடுபாடின்மை ஆகியனவே இத்தகு நஷ்டத்தைத் தோற்றுவித்த அகக் காரணங்களாகும். இவற்றை அறிந்து, மனம் உண்மையிலேயே மாறி, மாறியபடி அது செயல்பட்டால், பயன் அந்தக் கணமே கிட்டும் இழந்ததைப் பெறுவது மட்டும் அல்ல. அதனினும் பெரியதாகப் பெறுவோம்.

Published by Mr. P.V. Sankar on behalf of The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011, Printed by Mr. S. Devanathan at Sakthi Offset Printers, No. 238, Lawspet Main Road, Pakkamudayanpet, Puducherry - 605008, Published from Flat No. 11, 2nd Floor, Grace Apartments, No. 177, Papammal Koil Street, Vaithikuppam, Puducherry - 605012, Editor: Mr. N. Asokan, Secretary, The Mother's Service Society, No. 5, Puduvai Sivam Street, Venkata Nagar, Puducherry - 605011.

# Genius (மேதை)

ஆத்மா அனைவருக்கும் உண்டு என்பதால் அனைவரும் ஆத்மா அளவில் சமம். அதே போல் எல்லோருக்கும் மேதாவிலாசம் உண்டு. தெரிவதில்லை என்பது ஒரு கருத்து. பள்ளிக்கூடமே போகாத 10 வயது பையன். நீக்ரோ. வீட்டில் சாப்பாடுண்டு. தங்க அனுமதியில்லை. பல்கலைக்கழக விஞ்ஞான லாபரட்டரிக்கு வந்தான். உள்ளே போக முயன்றான். அனுமதியில்லை. கட்டடத்தைச் சுற்றி வந்தான். கிழிசல் உடையில் ஒரு நீக்ரோ பையனை விசாரித்தார். வெள்ளைக் கோழியை எப்படிக் கருப்புக் கோழியாக்குவது என அறியும் ஆவலைத் தெரிவித்தான். அவரைப் பார்த்தால் பிச்சைக்காரர் போன்ற தோற்றம். அவர் பையனை வாயிலுக்கு அழைத்து வந்தார். உள்ளே அழைத்துப் போனார். ஒரு biology புரொபசரிடம் அறிமுகப்படுத்தினார். நெடுநாள் வேலை செய்தான். படித்தான். அதைக் கண்டுபிடித்து உலகப் பிரசித்தி பெற்றான்.

அவனை உள்ளே கொண்டு போனவர் நீக்ரோ.

அவர் biology புரொபசர். விஞ்ஞானி.

நோபல் பரிசு பெற்றவர்.

பையனிடம் மேதாவிலாசமிருப்பதைக் கண்டு வியந்தார்.

தன் அந்தஸ்த்தின் செல்வாக்கு முழுவதும் கொடுத்தார்.

பையன் பிரபல மேதையானான்.

மேதாவிலாசம் அனைவருக்கும் உண்டு. அது வெளியில் தெரிவதில்லை.

அவனுக்கே தெரிவதில்லை. தெரியும் நேரமும் சந்தர்ப்பமும் வந்தால் அது பலிக்கும்.

இன்டர்நெட் அந்த வாய்ப்பை அனைவருக்கும் தருகிறது.

# மூன்று நாள் அழைப்பு

3 நாள் அழைப்பை மேற்கொண்டவர் பலர். அதன் பலன் மிகப் பெரியது. அது தீர்க்காத பிரச்சனையில்லை. அழைப்பை பிரச்சனைக்காக மேற்கொள்வதற்குப் பதிலாக அன்னையை நெருங்க மேற்கொள்வது நல்லது. அன்னையை நெருங்குவது யோகம். இதுவரை பல முறை மூன்று நாள் பிரார்த்தனை செய்தவர் இன்று அன்னையை நெருங்க அதை மேற்கொண்டால் அது சிரமமானது, முடியாது, முடியவே முடியாது எனப் புரியும். தீவிர அன்பர்கள், யோகம் செய்ய விரும்புகிறவர்கட்கு உரிய முறை அது.

*அழைப்பு அதிகபட்ச ஆழத்திலிருந்து எழ வேண்டும்.*
கொஞ்சம் கொஞ்சமாக அழைப்பின் ஆழம் அதிகப்பட வேண்டும்.

அதுவே யோகத்திற்குரிய அழைப்பு. ஒருமுறை அதுபோல் அழைப்பதும் பெரிய சாதனை. ஒருமுறை அதுபோல் அழைத்துவிட்டால் அழைப்பின் மீது வெறுப்பு வரும்.

*அழைப்பு மறந்து போகும், நெடுநாள் மறந்து விடும்.*

மறந்தது நினைவு வருவது ஆர்வம், நம்பிக்கை, பக்தி. 3 நாள் பிரார்த்தனையை 3 நாள் அழைப்பாக மாற்றியவர் ஒரு முறைக்குமேல் செய்வதை நான் அறியேன். எனக்கு உடையவர்கள், எனக்கு வேண்டியவர்கள், எவரும் அழைப்பை மேற்கொள்வதில்லை. ஒரு அன்பர் மட்டும் 3 நாளில்லை, வேலை முடியும் வரை எனக்காக அழைப்பை மேற்கொண்டார். 30 நாள் அவரை அழைக்கச் சொன்னேன். அது பெரிய காரியம். 14-ஆம் நாள் காரியம் முடிந்தது. அந்த ஒரு அன்பர் தவிர அழைப்பை அது போல் ஏற்றவரை நானறியேன்.

அழைப்பு உடனடியாக அன்னை தரிசனம் தரும். அது சூட்சும தரிசனம்.
ரோடில் நடப்பது போல் மலை ஏற முடியாது.
ஒவ்வொரு அடியும் அதிக சிரமம் தரும், தொடர முடியாது.

அழைப்பு அறிவால் செய்வதில்லை. ஆத்மாவால் செய்ய முடியாது. ஆத்மா ஜீவனின் பகுதி. ஆத்மா அழைத்தால் மோட்சம் கிடைக்கும். ஜீவன் முழுமையானது. அழைப்பு ஜீவனுக்குரியது. ஜீவனும் மோட்சத்தை நாடினால் மோட்சம் கிடைக்கும்.

*ஜீவன் அன்னையின் திருவுள்ளம் நிறைவேற அழைப்பது அழைப்பு.*
அது ஒவ்வொரு அழைப்பும் முந்தையதைவிட ஆழ்ந்திருப்பது யோகம்.
அன்பன் சாதகனாகும் அழைப்பு அது.
*அதை ஜீவனின் முழுமையான அழைப்பு எனலாம்.*